பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 03 புதன்கிழமை 15.02.2023 கதிர் 99

### இது ரகசியம் அல்ல!

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் ஒரு தடவை ரணில் விக்கிரமசிங்கவை"குள்ளநரி"என்றுவிளித்திருப்பார். அவர் பலவிடயங்களில் ஒரு தீர்க்க தரிசியாகச்

☞2

# ராஜபக்ஷக்கள் மீள அதிகாரத்தை கைப்பற்றவே தேரர்கள் வீதிக்கு

## எதிரணி பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 15

நாட்டின் அதிகாரத்தை மீளக் கைப்பற்றுவதற்காக பௌத்ததேரர்களை மீண்டும்களமிறக்கியுள்ளது ராஜபக்ஷ குடும்பம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி குற்றம் சாட்டினார்.

☞2

## தேர்தல் நடக்குமா? இல்லையா? ஆணைக்குழுதான் சொல்லவேண்டும்

### இப்படிக் கூறுகின்றார் பஸில்



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிடம்தான் கேட்க வேண்டும்.

– இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின்தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

☞2

## பிரபாகரனை வைத்து இன்னும் எத்தனை நாள்தான் அரசியல்?

### கேட்கிறார் கம்பன்பில



பிரபாகரனை வைத்து இன்னும் எத்தனை காலத்துக்கு அரசியல் செய்யப் போகின்றீர்கள்? – என்று இந்திய, இலங்கை தமிழ் அரசியல் தலைவர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார் புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி..

இரு நாட்டு தமிழ் அரசியல் தலைவர்களும் இன்னமும் தூக்கத்தில்

☞2

## முஸ்லிம்களை அவமதித்தது ராஜபக்ஷக்களே!

### புத்தளத்தில் சுட்டிக்காட்டினார் சஜித்





இந்நாட்டு முஸ்லிம் மக்களுக்கு மிகப்பெரிய அவமதிப்பைச் செய்தவர்கள் ராஜபக்சக்களே. கொரோனா காலத்தில் அடக்கமா அல்லது தகனமா என்ற விடயத்தில் அவர்கள் நினைத்தது போல் செயற்பட்டார்கள்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்

☞2

## மதுபோதையில் குழு மோதல்; நால்வர் வெட்டிப் படுகொலை!

### குருநாகலில் நேற்றிரவு கொடூரம்

மதுபோதையில் இரண்டு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் நால்வர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் குருநாகலில் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

22, 25, 35, 41 வயதுடைய நபர்களே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர்களில் 25 வயதுடைய இளைஞர் கடந்த 6 நாட்களுக்கு முன்னர் திருமணம் செய்தார் எனவும், அவரின்

☞2

## பஸிலின் சொத்துப் பட்டியலை அம்பலப்படுத்தியே தீருவோம்

### விமல் எம்.பி. சூளுரை



ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவின் அமெரிக்கச் சொத்துப் பட்டியலை விரைவில் வெளியிட்டே தீருவோம்.

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும்

☞2

## யாழில் தமிழ் பாட்டுப் பாடி தெறிக்கவிட்டார் தயாசிறி



ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழிழ் பாட்டு பாடி, கட்சி ஆதரவாளர்களை மகிழ்வித்துள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்

☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டவர். அதை நேரில் பார்க்கும் சந்தர்ப்பங்கள் வாய்த்திருக்கிறது.

பாலசிங்கத்தாரின் மதிப்பீட்டில் ஒரு கிஞ்சித்தும் மாற்றமில்லை என்பதற்கு இந்தத் தேர்தல் நடவடிக்கைகளே ஒரு உதாரணம். தேர்தலை நடத்த மாட்டேன் என்று ரணில் ஒருபோதும் சொல்லவில்லை. அண்மையில் கொழும்புக்கு வந்து சென்ற பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளரிடம் கூட தேர்தல் நடக்கும் என்றுதான அவர் கூறியிருந்தார்.

ஆனால், தேர்தலுக்கு அத்தியாவசியமான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப் படுவதற்கான நடவடிக்கைகள் இடையில் நிறுத்தப்படும்படி பார்த்துக்கொண்டார். திறைசேரியில் இருந்து பணம் விடுவிக்கப்படவில்லை என்பதால் வாக்குச்சீட்டுக்களை அச்சடிக்கும் பணியைத் தொடர முடியவில்லை என்று அரச அச்சகம் அறிவித்துவிட்டது. இதற்குத் திறைசேரி எந்தப் பதிலும் வழங்கவில்லை.

வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணி முடியாத காரணத்தால் தபால் மூல வாக்குச் சீட்டுக்களை உரிய திகதியில் விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் தபால் மூல வாக்களிப்பு எப்படியும் பிற்போடப்படவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இவ்வளவு பிரச்சினைக்கும் காரணமாக அரச அச்சகத்தில் வாக்குச் சீட்டுக்களை அச்சிட உண்மையிலேயே பணம் இல்லையா என்றால், அதுதான் கிடையாது. இங்கேதான் ரணிலின் நரித்தனம் வெளிப்படுகின்றது.

அரச அச்சத்தில் இன்னும் இரண்டு தேர்தல்களுக்குத் தேவையான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் அளவிற்கு காகிதாதிகள் உள்ளிட்ட அச்சுப் பொருட்கள் கைவசம் தாராளமாக இருக்கின்றன. அவற்றைக் கொண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வாக்குச் சீட்டுக்களைத் தாராளமாக அச்சடிக்க முடியும். பின்னர் எது அவர்களைத் தடுக்கிறது?

தேர்தல்கள் தொடர்பான பணிகள் திறைசேரியில் இருந்து பணம் விடுவிக்கப்படாமல் அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்படக்கூடாது என்றொரு சுற்றறிக்கை ஏற்கனவே இருக்கின்றது. அதை மீறிச் செயற்பட முடியாத நிலையிலேயே அச்சகத் திணைக்களம் தற்போது இருக்கின்றது.

இந்தச் சுற்றறிக்கையை மேவி, இருப்பில் உள்ள பொருட்களை வைத்து வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் உத்தரவை ரணில் விக்கிரமசிங்கவோ அமைச்சரவையோ விடுத்தால் இந்தச் சிக்கல் உடனடியாகத் தீர்க்கப்படக்கூடியது. ஆனால் தேர்தலை நிறுத்துவதற்கான நரித்தனத்தால் அதைச் செய்யவில்லை இன்றைய ஆட்சியாளர்கள். அதனாலேயே தேர்தல் தற்போது சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டுள்ளது.

இந்தப் பிரச்சினையை ஓரிரு நாள்களுக்குள் எப்படியாவது தீர்த்து தேர்தலை நடத்திவிடமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நம்புகின்றது. அதனால்தான் அது தேர்தல்கள் பிற்போடப்படுவதான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் இதுவரை விடுக்கவில்லை.

ஆனால் அது நடக்குமா அல்லது அடுத்த நரித்தனம் வெளிப்படுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் வாசகர்களே!

- இடிமின்னல் -

## ஒற்றையாட்சிக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் தீர்வு விடயத்தில் இனவாதத்தை – மதவாதத்தை உண்டு பண்ணாத வேலைத்திட்டத்துடன்தான் நாம் பயணிப்போம்.

நாட்டைப் பாதுகாக்கும் நோக்கில் பௌத்த தேரர்கள் 2019 இல் வீதியில் இறங்கினார்கள். ஆனால், ஆட்சியைக் கைப்பற்றும் தேவையாக அன்று இருந்தது.

இப்போதும் அதிகாரத்தை மீளக் கைப்பற்றுவதற்காக தேரர்களை மீண்டும் களமிறக்கியுள்ளது ராஜபக்ஷ குடும்பம்.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் கூறினார், ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எப்போதும் எனக்கு ஏசுபவர். இன்றும் ஏசுகின்றார். நாளைக்கும் ஏசுவார். நான் அவருக்கு ஏசுவதில்லை. அநுரவைப் பற்றி நான் கூறப்போனால் அவர் கட்சியிலும் இருக்கமாட்டார்; நாட்டிலும் இருக்க மாட்டார் என்று கூறினார்.

ரணில் மாத்திரம் அறிந்து வைத்திருக்கும் அநுர தொடர்பான அந்த பாரதூரமான இரகசியம் என்ன?

அந்த இரகசியத்தை ரணில் பாதுகாப்பது ஏன்? ரணில் அந்த இரகசியத்தைப் பாதுகாத்து அநுரவிடம் இருந்து எதை எதிர்பார்க்கின்றார்?

இது பாரதூரமான கூற்று. இதை நாட்டு மக்கள் அறிய வேண்டும். இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவு என்ன என்று எல்லோரும் அறிய வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்குத் தந்திரோபாயமான முறையில் நடவடிக்கை எடுத்து வருகின்றது ஜேவிபி. மக்கள் ஏமாந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

## தேர்தல் நடக்குமா? ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது எங்களது கட்சியின் வேலை இல்லை. அது தேர்தல் ஆணைக்குழுவின் வேலை. இதனால் இது தொடர்பில் எம்மால் எதுவும் சொல்ல முடியாது.

தேர்தல் நடக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவிடம்தான் கேட்க வேண்டும்.

இந்தத் தேர்தலில் யாரும் எமக்குச் சவால் அல்ல. நாம் வெற்றி பெறுவோம். 50 வீதத்துக்கும் அதிகமான தொகுதிகளைக் கைப்பற்றுவோம் – என்றார்.

## பிரபாகரனை வைத்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தவாறே கருத்துக்களை வெளியிட்டுவருகின்றார்கள் என்றும், ஆனால், தமிழ் மக்கள் விழிப்படைந்து விட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரபாகரனின் பெயரைச் சொல்லி தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது என்றும் அவர் கூறினார்.

பிரபாகரனின் பெயரைக் கேட்டு சிங்கள மக்கள் அஞ்சுவார்கள் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் தப்புக் கணக்குப் போடக்கூடாது என்றும் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

பிரபாகரன் இன்னமும் உயிருடன் தான் உள்ளார் என்று தெரிவித்துள்ள நெடுமாறன், முதலில் தன்னை சுய பரிசோதனை செய்யவேண்டும். நெடுமாறனின் கருத்தை வைத்து அரசியல் செய்ய முனையும் இந்திய, இலங்கை தமிழ் அரசியல் தலைவர்களும் தங்களைப் சுயபரிசோதனை செய்ய வேண்டும்.

2919 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி பிரபாகரனை எமது படையினர் அழித்துவிட்டார்கள். எனவே, அவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் உயிர்த்தெழவும் மாட்டார் – என்றார்.

## முஸ்லிம்களை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

புத்தளத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போராட்டத்தின் மூலம் கோரப்பட்ட எந்த மாற்றமும் இதுவரை எட்டப்படவில்லை. அகிம்சை ரீதியாகப் போராட்டத்தில் ஈடுபட்டவன் என்ற வகையில் இது குறித்து நான் வருந்துகின்றேன்.

வன்முறையை விரும்பும் சில அரசியல் குழுக்கள் இந்த நாட்டைப் பொறுப்பேற்கின்றோம் எனக் கூறுவது நகைப்புக்குரியது.

இன்றும் இந்நாட்டை ஆள்வது ராஜபக்ஷ நிழல் அரசே என்பதால், ராஜபக்ஷக்களால் தூண்டப்பட்ட இனவாதத்தை அழித்து சகோதரத்துவம் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். ராஜபக்ஷக்களின் இந்த நிழல் அரசை விரட்டியடிக்க வேண்டும்.

உலகின் பிற நாடுகள் நமக்குப் பின்னால் இருந்தாலும், இந்நாடுகள் இப்போது நம்மை விட முன்னேறியுள்ளன. நாமும் அந்த வழியில் பயணிக்க ஒரு புதிய தொடக்கத்துக்குச் செல்ல வேண்டும்.

புதிய தொழில்நுட்பப் போக்குகள் மற்றும் திட்டங்கள் மூலம் இளைஞர்களை வலுவூட்டி நாட்டில் தகவல் தொழில்நுட்ப புரட்சியை உருவாக்க வேண்டும் – என்றார்.

## மதுபோதையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலேயே நண்பர்கள் நேற்றிரவு ஒன்றுகூடி மதுபானம் அருந்தியுள்ளனர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

முன்பகை கொண்ட இரு தரப்பினருக்கிடையில் வாய்த்தர்க்கமாக ஆரம்பித்த மோதல், இறுதியில் வாள்வெட்டில் நிறைவடைந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மூவரும் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 8 பேரைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பஸிலின் சொத்துப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தமது அணி இனி ஒருபோதும் மொட்டுக் கட்சியிடம் சரணடையாது என்றும் அவர் சூளுரைத்தார்.

நாட்டை அழித்த மொட்டுக் கட்சிக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## யாழில் தமிழ் பாட்டுப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கருத்தமர்வும் இடம்பெற்றது.

இதன்போதே ஐயோ சாமி நீ எனக்கு வேணாம் –என்ற பாடல் உள்ளிட்ட சில தமிழ் பாடல்களைப் பாடி, மண்டபத்தில் இருந்தவர்களை மகிழ்வித்தார் தயாசிறி.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622



காலைக்கதிர்
Kalaikkathir

## 13ஆவது திருத்தம் குறித்த

# அரசின் நிலைப்பாடு மாறாவிட்டால் வீதிக்கு இறங்கி பிக்குகள் போராடுவர்

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தனது உண்மை நிலைப்பாட்டை அரசு உடனடியாக உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் இல்லாவிடின் மீண்டும் வீதிக்கிறங்கி போராட்டத்தில் ஈடுபடுவோம் என மக்கள் பேரவை அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார். அதற்காக அரசுக்கு செவ்வாய்க்கிழமை வரையில் காலக்கெடு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டுக்குப் தீர்மானங்களை எடுக்கப்பார்க்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் கோரவில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் தமது அரசியல் நோக்கத்திற்காக அதிகாரப் பகிர்வு விவகாரத்தைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தேர்தல் காலத்தில் அதிகார பகிர்வு பரவலாகப் பேசப்படும் அதன் பின்னர் மறக்கப்படும்.

அதிகார பகிர்வுக்கு பெரும்பான்மை சமூகத்தினர் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் நன்கு அறிவார்கள்.

இருப்பினும் தங்களின் அரசியல் தேவைகளுக்காக அதிகார பகிர்வு விவகாரத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அதிகாரப் பகிர்வை வழங்குவது சிறந்ததாக அமையாது.அதனால் நாட்டில் இல்லாத பிரச்சினைகள் தோற்றம் பெறும்.

சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டும், காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் நேர்ந்தது என்ன என்பதை அரசு வெளிப்படையாக தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் அறிவிக்க வேண்டும்.

பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் போராளிகள் தொடர்பில் முறையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

போர் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில் போரின் சுவடுகள் மற்றும் தாக்கங்கள் தொடர்வது முறையற்றதாகும்.

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தாத வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒத்துழைப்பு வழங்குவோம். 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது.

அரசியல் நோக்கத்திற்காக இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிப்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

13ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த முயற்சித்தால் மீண்டும் வீதிக்கு இறங்கி அரசாங்கத்திற்கு எதிராக தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் – என்றார்.

# கடன்வழங்குநர் கூட்டத்தில் வெள்ளியன்று இலங்கையும்

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் இந்தியா என்பன கூட்டிணைந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடத்தவுள்ள கடன்கள் தொடர்பான கூட்டத்தில் இலங்கையும் பங்கேற்கவுள்ளது.

நிகழ்நிலை (ஒன்லைன்) முறைமையில் நடைபெறவுள்ள இந்த வட்டமேசை மாநாட்டில் தற்போது கடன் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்ற மற்றும் ஜி -20 அமைப்பின் பொதுச்செயற்திட்டத்தின்கீழ் அதற்கான தீர்வினைக் கோரியிருக்கின்ற இலங்கை, எதியோப்பியா, ஸாம்பியா, கானா, சூரிநேம் மற்றும் ஈக்குவடோர் ஆகிய நாடுகள் கலந்துகொள்ளவுள்ளன.

அதேவேளை இந்தியா, சீனா, சவுதி அரேபியா உள்ளடங்கலாக முக்கிய 7 கடன் வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளும் கடன்கள் தொடர்பான இவ்வட்டமேசை மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

ஜி- 20 அமைப்பின் நிதியியல் அதிகாரிகள் எதிர்வரும் 23 முதல் 25ஆம் திகதிவரை இந்தியாவின் பெங்களூர் நகரில் ஒன்றியணைவிருப்பதுடன் 25 ஆம் திகதி வட்டமேசை மாநாடொன்றை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் ஜி-20 அமைப்பிற்கு தற்போது தலைமைதாங்கும் இந்தியாவும் இணைந்து கடன்கள் தொடர்பான இந்த வட்டமேசை மாநாட்டை ஒழுங்கு செய்துள்ளன.

அடுத்த ஆண்டு ஜி-20 அமைப்பிற்குத் தலைமை தாங்கவுள்ள பிரேஸிலும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்கும் உத்தியோகபூர்வ கடன்வழங்குனர்கள், தனியார்துறையினர், சர்வதேச நிதியியல் நிலையம் மற்றும் தனியார்துறையைச் சேர்ந்த இரண்டு நிதியியல் கட்டமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் பாரம்பரிய கடன்வழங்குனர்கள் மற்றும் முன்னேற்றமடைந்த பொருளாதாரத்தைச் சேர்ந்த கடன்வழங்குனர்கள், சீனா, இந்தியா, சவுதி அரேபியா போன்ற புதிய கடன்வழங்குனர்கள், தனியார் துறையினர் மற்றும் கடன்பெற்ற நாடுகள் உள்ளடங்கலாக கடன் மறுசீரமைப்புடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைப்பதே இந்த மாநாட்டின் பிரதான நோக்கமென சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தலை அரசு கட்டாயம் நடத்தியே ஆகவேண்டும்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்படக் கூடிய சூழல் வேண்டுமென்றே தோற்றுவிக்கப் பட்டுள்ளது. தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக் குழு கேட்ட 770 மில்லியன் ரூபாய்களை விடுவிக்க முடியாத சூழல் இருப்பதால் இந்த நிலை ஏற்படுவ தான தோற்றப்பாடு ஒன்று ஏற்படுத்தப்படுகின்றது.

தை மாதத்தில் அரசின் டொலர் இருப்பு அதிகரித் திருப்பதாகக் கூறியிருக்கும் இந்த நிலையில்தான் அரசு தேர்தல்களுக்குப் பணத்தை விடுவிக்க முடி யாத நிலை இருப்பதாகவும் சொல்கிறது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறவேண்டுமானால் அந்த நிதி தேர்தலுக்குச் செலவிடப்படாது என்கிற உத்தரவாதம் இருக்கவேண் டும் என்று மற்றொரு காரணம் சொல்லப்படுகின் றது. அது நிச்சயமானதுதான். நாட்டைப் பொருளா தார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கான கடனு தவியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை நாணய நிதியம் ஏற்றுக்கொள்ள மறுக்கக்கூடிய சூழலை இல்லை என்று சொல்லிவிடமுடியாது. அதற்காக தேர்தல் நிறுத்தப்படவதையும் அது ஏற் றுக்கொள்ளும் என்று சொல்லிவிடமுடியாது. மக் களாட்சி மாண்பு (ஜனநாயகம்), மனித உரிமைகள் ஆகிய இரு விடயங்களிலும் அதிக கரிசனையும் அவற்றைத் தமது நிபந்தனைகளாகவும் கொண்ட அமைப்பு நாணய நிதியம். எனவே அது நிதிச் சிக்கல் கள் காரணமாக ஒரு தேர்தல் நிறுத்தப்படுவதை யும் ஆதரிக்கப்போவதில்லை.

அத்தோடு நாணய நிதியத்தின் கடனுதவி பங் குனி மாதத்தில் தேர்தலுக்கு முன்னரோ அல்லது தேர்தல் நடந்து முடிந்த உடனேயே கிடைப்பதற்கான வாய்ப்புக்களும் இப்போதைக்குப் பிரகாசமாக இல்லை. அதனால் தேர்தலுக்கான பணத்தை அரசு வேறு வழிகளில்தான் தேடியாகவேண்டும். அது மக்களின் அடிப்படை உரிமை, மக்களாட்சித் தத்துவத்தின் ஆணிவேர். அதைத் தடுப்பதை, மக் களின் உரிமைகள் மறுக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே தேர்தலை நடத்துவதற்கான சாத்தியமான வழிகள் எல்லாவற் றையும் ஆட்சியாளர்கள் மேற்கொள்வேண்டும்.

நேற்று கட்சித் தலைவர்களின் செயலாளர்க ளுடன் நடத்திய கூட்டத்தில் தேர்தலை நடத்துவதற் கான வழிகள் இருந்தபோதும் அவற்றுக்கு முட்டுக் கட்டைபோடும் வகையிலேயே ஆட்சியாளர்கள் செயற்படுகின்றார்கள் என்ற தொனியிலேயே ஆணைக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. தற் போதைய சூழலில் தோற்றுப் போய்விடுவோம் என் கிற அச்சம் தவிர வேறு எந்தவொன்றும் இதற்குக் காரணமாக இருக்க முடியாது. இது வெட்கக்கேடா னது. மக்களாட்சி மாண்புக்கு இழுக்கு ஏற்படுத்து வது. இப்படிச் செய்வதால் மக்கள் மத்தியில் கோப மும் விரக்தியும் ஏற்பட்டு அவர்கள் மீண்டும் வீதி களுக்கு இறங்கும் நிலையும் அதனால் மீண்டும் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புக்களையும் ஒப்பிடும் போது, ஆளும் தரப்புக்கு இந்தத்தேர்தலில் ஏற்படக் கூடிய தோல்வி பெரியதல்ல. எனவே உள்ளூராட் சித் தேர்தல்களை அரசு திட்டமிட்டபடி நடத்தவேண் டும். அதற்கான வசதிகளை ஆட்சியாளர்கள் ஏற் படுத்தித் தரவேண்டும்.

# நாணய நிதியத்துடன் உடன்படாமல் எவராலுமே நாட்டை ஆளமுடியாது

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் மார்ச் இறுதிக்குள் சர்வதேச நாணய நிதி யத்துடன் ஒரு முழுமையான இணக்கப் பாட்டை எட்டுவதற்கே முயற்சிக்கின்றோம். சீனா அதற்கான நிதி உத்தரவாதத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம். நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டாமல் எவராலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறி விக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது –

கடன் மறுசீரமைப்புக்கள் இன்றி கடன் உதவியை வழங்க முடியாது என்ற நிலைப் பாட்டிலேயே அரசு இருக்கிறது.

இந்த விடயம் தொடர்பில் நிபுணத்துவம் மிக்க அதிகாரிகள் இராஜதந்திர ரீதியில் நட வடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதற்கமைய இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் என்பன சாதகமான பதிலை வழங்கி யுள்ளன. அதேபோன்று சீனாவும் 2 வருட கால அவகாசம் என்ற சாதகமான பதிலை வழங்கியுள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த கால அவகாசம் போதாது என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி, திறைசேரி மற்றும் மத்திய வங்கி அதிகாரிகள் எவ்வாறேனும் மார்ச் இறுதிக்குள் இதனை நிறைவடையச் செய் வதற்கு பெரும்பாடுபட்டு வருகின்றனர். இந்த முயற்சி வெற்றியடையாமலிருக்க முடியாது.

வெற்றியடையாவிட்டால் யார் வந்து எந்த வழியில் நாட்டை முன்னேற்றுவதாகக் கூறினாலும் அதனைச் செய்ய முடியாது. இந்த வேலைத் திட்டங்களை வெற்றிய டைச் செய்யாமல் எவராலும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்றார்.

# மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் முடிவில்லை

மின்சாரக்கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு மற்றும் மின்சார சபை இணைந்து நேற்று திங்கட்கிழமை நடத்திய கலந்து ரையாடல் இணக்கப்பாடின்றி நிறைவடைந் ததாக இலங்கை மின்சார சபையின் அதி காரிகள் தெரிவிக்கின்றனர்.

கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இரண்டு தரப்பினரும் கூடிக் கலந்துரை யாடி இறுதித் தீர்மானம் எடுக்குமாறு திங்கட் கிழமை கூடிய தேசிய பேரவை தெரிவித்தி ருந்தது.

அதற்கமைய இவ்விடயம் தொடர்பில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு மற்றும் இலங்கை மின்சார சபை அதி காரிகள் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். அதில் இறுதித் தீர்மா னம் எதையும் எடுக்க முடியாமல் போன தாகவும் மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தன மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் செவ்வாய்க்கிழமை



தேசிய பேரவை மீண்டும் கூடியபோது இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை 15ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பேரவைக் குத்தெரிவித்திருந்தாகவும் அதனால் நாளை (இன்று) இது தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்படும் என தான் நம்புகிறார் என் றும் சபாநாயகர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அங்கு தெரிவித்தார்.

# சுகாதார சேவைக்கான எரிபொருள்பெற 38 மில்லின் டொலர் வழங்கும் ஜப்பான்

சுகாதார சேவைகளைத் தடையின்றி வழங்குவதற்கான எரிபொருளைப் பெற 38 மில்லியன் டொலர்களை வழங்குவ தற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்துள் ளது.

சுகாதார சேவைகள் மற்றும் போக்கு வரத்து வசதிகளை உறுதிப்படுத்தி இலங் கையில் சுகாதாரத் துறையின் சுகாதார சேவைகள் விநியோகத் தொகுதியை மேம் படுத்துவதற்காக ஜப்பான், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட் டத்தின் கீழ் இந்நிதி வழங்கப்படவுள்ளது.

தற்போது இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அத்தியாவசிய மற்றும் அவசர சுகாதார சேவைகளை தங்குதடையின்றி மேற் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற் கான எரிபொருள் விநியோகத்துக்காக 5 பில்லியன் ஜப்பான் யென்களை (அண்ண ளவாக 38 மில்லியன் அமெரிக்க டொலர் கள்) வழங்குவதற்கு ஜப்பான் உடன்பாடு தெரிவித்துள்ளது.

இந்த நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்புடைய ஒப்பந்தங்களில் கையொப்ப மிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளூராட்சி சபைக்கான தேர்தலுடன் ரணில் – ராஜபக்ஷ அழிவு தொடங்கும்

## கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எதிர்வுகூறல்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுடன் ரணில் ராஜபக்ஷ ஆட்சியின் அழிவு தொடங்கும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பதில் தலைவர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

நாவல பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் பணிகளை முன்னெடுக்குமாறு உயர்நீதி மன்றம் அறிவுறுத்தியுள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அரசு செயற்படுவது வெறுக்கத்தக்கது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைப் பிற்போடும் நோக்கம் தமக்கு கிடையாது, தேர்தலை நடத்தவே முயற்சிக்கிறோம் என அரசு ஒருபுறம் கூறிக்கொண்டு தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலேயே செயற்படுகிறது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஒதுக்குவதை அரசு தாமதப்படுத்துகிறது.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்ற பிரச்சினை ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறி லங்கா பொதுஜன பெரமுனவிற்கும் உண்டு. யானை மற்றும் மொட்டுக் கூட்டணி ஸ்தாபிக்கப்படாத நிலையில் தேர்தலை எதிர்கொள்ள இவ்விரு தரப்பினரும் தயாரில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன பெரமுனவும் தயார் இல்லை



என்றால்.தேர்தல் போட்டியில் இருந்து அவர்கள் தாராளமாக விலகிக் கொள்ளலாம். நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் உரிமை ஜனாதிபதிக்கும், அவர் தலைமையிலான ஆட்சிக்கும் கிடையாது.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாக்க உயர்நீதிமன்றத்தை நாடுவதை தவிர மாற்று வழியேதும் தற்போது கிடையாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அரசைக் கவிழ்க்காது, அரச நிர்வாக கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தாது எனக் கூறும் அரசு தற்துணிவுடன் மக்களின் ஆணையை எதிர்கொள்ளவேண்டும் – என்றார்.




# மஹிந்த மகனின் ராக்கெட் எங்கே?

### 332 மில்லியன் டொலர்கள் மோசடி என சாடுகிறார் வசந்த சமரசிங்க

மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷவின் வளர்ப்பு நாயின் கழுத்தில் 90 குடும்பங்களின் தங்கச் சங்கிலி இருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

கடந்த ஆட்சியில் ராஜபக்ஷவினரால்மாத்திரம் முந்நூற்று முப்பத்திரண்டு மில்லியன் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது. நம் நாட்டில் அரசாங்க சொத்துக்களைத் திருடியவர்களில் சிலர் உயிருடன் இல்லை.

மஹிந்தவின் மகன் சீனாவில் ராக்கெட் செய்வதற்காக முந்நூற்று முப்பத்திரண்டு மில்லியன் டொலர்கள் செலவிட்டார் எனத் தகவல் வெளியாகியிருந்தது. ஆனால் இன்று சீனாவும் அந்த ராக்கெட் எங்கே போனது என்று தேடிக்கொண்டிருக்கின்றது. மோசடி செய்யப்பட்ட பணம் எங்கே என்று நாடு தேடிக்கொண்டிருக்கின்றது.

ஆனால் மஹிந்தவின் இளைய மகன் கடன் கொடியை உயர்த்தி நாட்டின் பணத்தை செலுத்தி சிங்கராஜாவில் ஹோட்டல் கட்டியுள்ளார். கல்யாணத்துக்கு பிறகு முப்பத்தாறு கோடியில் கோட்டே துவா வீதியில் வீடு வாங்கினார். மறுபுறம் உள்ள நிலத்தையும் நாற்பத்தைந்து கோடி ரூபா கொடுத்து வாங்கியிருந்தார். தற்போது அவரிடம் மூன்று நிலங்கள் உள்ளன.

தற்போது ராக்கெட் விஞ்ஞானிகளின் முயற்சியும் தோல்வியடைந்தது. இவற்றில் தெரிந்துக்கொள்ளலாம் இவர்களின் அறிவியல் எப்படி என்றும் தெரிவித்துள்ளார்.

# நாவாந்துறையில் மாநகர சபையின் நடமாடும் சேவை

யாழ் மாநகர சபையின் நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நாவாந்துறை சென், நீக்கிளஸ் சனசமூக நிலையத்தில்

நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வட்டாரம் 10, 11, 12 மற்றும் 13 ஆகியவற்றிகான ஆதனவரி அறிவித்தல் படிவம்/ சோலைவரி வழங்கல், பெயர் மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை இந்த நடமாடும் அலுலவலகத்தில் மக்கள் பெற்றுக்கொள்ளலாம். பொது

மக்களால் இதுவரை காலமும் செலுத்தப்படாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதன வரி, தண்ணீர வரி போன்றவற்றையும் செலுத்த முடியும்.

நடப்பாண்டின் ஆதன வரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5% கழிவினைப்

பெற்றுக்கொள்ள முடியும். என்று மாநகர சபை அறிவித்துள்ளது.

“வரிகளை முற்கூட்டியே அறவிட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதற்கு ஒத்துழைப்பினை வழங்கியுதவுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்”" என்று

யாழ் மாநகர சபையின் முதல்வர் கேட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணம் கலாச்சாரா மண்டபம் யாருக்கானது?.



- ந.லோகதயாளன் -

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசினால் ஒரு பில்லியன் ரூபா (இந்திய மதிப்பில்) செலவில் அமைக்கப்பட்ட கட்டடம் மாநகர சபைக்கு என்ற நிலையில் இருந்து வடக்கு மாகாண சபைக்கு என மாற்றி மத்தியினால் சுரண்ட முயற்சிக்கப்படுவதாக அஞ்சப்படுகின்றது.

கலாசார மண்டப கட்டுமானப் பணி தொடங்குவதற்கு முன்பே இலங்கை – இந்திய அரசுகள், மாநகர சபை ஆகியவற்றிடையே ஒரு ஒப்பந்தம் எழுதப்பட்டது. அதாவது இந்தக் கட்டுமானத்துக்காக யாழ். மாநகர சபையின் நிலத்தை அது மத்திய அரசிற்கு வழங்க, மத்திய அரசு கட்டுமானத்திற்காக அதனை இந்திய அரசுக்கு வழங்கும் என்று அந்த ஒப்பந்தம் தெரிவித்தது.

2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி கொழும்பில் அப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த வை.கே.சிங்கா மற்றும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வை.டி.நிகால் ஜெயதிலகா ஆகியோர் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ஒப்பமிட்டதன் மூலம் இதனை அமைக்க இணைக்கம் ஏற்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து திட்ட அறிக்கைகள் இதர பணிகள் அனைத்தும் மேற்கொண்டு 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கட்டுமானப் பணிகள் தொடங்குகின்றபோது யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்ஸ்யூலர் ஜெனரல் மற்றும் அப்போதைய மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் ஆகியோருடன் கட்டுமான நிறுவனதாரர்களும் ஒப்பந்தம் மேற்கொண்டே அதன் பணிகள் தொடங்கப்பட்டது.

கட்டுமானம் மிக வேகமாக இடம்பெற்று 2020ஆம் ஆண்டு பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவடைந்தன. இருந்தபோதும் அப்போது உலகம் முழுவதும் தாண்டவமாடிய கொரோனா இதன் திறப்பு விழா அல்லது கையளிப்பு விழாவிற்கு தடையாக காணப்பட்டது. இதன்போது கட்டுமானப் பணிக்காக இந்தியாவில் இருந்து வந்த பணியாளர்களே கட்டடத்தைப் பராமரித்தனர்.

இக் கட்டட்டத்தில் குளிரூட்டிகள் மட்டும் 100ற்கும் மேற்பட்டவை காணப்படுவதனால் அவற்றை இயங்க வைக்கவேண்டிய கட்டாயம் இருந்தது. இயங்கா நிலையில் இருந்தால் பாவனைக்கு முன்பே உத்தரவாதக் காலம் முடிவடைந்து விடும் என்பதோடு மின் இணைப்பு வயர்களை எலி நாசம் செய்யும் நிலமையும் இருந்ததால் அதனைத் தடுக்க மின்சார இணைப்பை வழங்கியே ஆகவேண்டும் என்ற நெருக்கடி காணப்பட்டது. இதற்காக வளிச் சீராக்கிகளை (குளிரூட்டி) இயங்க விடும் முடிவிற்கு வந்தனர்.

இந்தக் காலத்திலேயே இக் கட்டடத்தை உத்தியோக பூர்வமாக பொறுப்பெடுங்கள் இந்திய பணியாளர்கள் நாடு திரும்பவுள்ளனர் என இந்திய தூதரகம் கோரிக்கை விடுத்தது. ஆம் நாம் பொறுப்பேற்க தயாராகவுள்ளோம் தாருங்கள் என யாழ்ப்பாணம் மாநகர சபையும் கோரியது. ஆனாலும் எமது கரத்திற்கு எந்த வழியில் கிட்டியதோ அந்த வழியிலேயே வழங்க முடியும் அதுவே சட்டம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறுகின்றது என இந்தியத் தூதரகம் பதிலளித்தனர்.

இதன்போதே சர்ச்சை தொடங்கிவிட்டது. அதாவது கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தை மத்திய அரசின் அதிகாரிகள் மற்றும் தெற்கு அரசியல்வாதிகள் பார்வையிட்டுச் சென்ற பின்னர் அவர்களிற்கு அதில் ஓர் ஈர்ப்பு ஏற்பட்டு அந்தக் கட்டடத்தை தம் வசமே வைத்துக்கொள்ளும் ஆசை உருதமக்கும் அல்லது தாம் சார்ந்த அமைச்சின் பணிகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கும்போது இக் கட்யிடத்தை முழுமையாக, இலவசமாகப் பயன்படுத்த அதில் தமது இருப்பை நிலை நிறுத்த முயன்றனர்.

இதற்காக யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபம் பராமரிப்பு குழு அல்லது நிர்வாகக் குழு ஒன்று அமைத்து அதன் மூலம் நிர்வகிக்கப்படும் என்றும் கட்டடம் மாநகர சபையிடமே இருக்கும் என்றும் தமது தலையை நுழைக்கத் தொடங்கினர். இதற்கு 2021ஆம் ஆண்டில் அப்போதைய மாநகர சபையும் ஒப்புக்கொண்டது.

இக் காலத்தில் கலாசார மண்டபத்தைத் தொடர்ந்து பராமரிப்பதற்கான திட்டத்தைத் தயாரித்து அதற்குத் தேவையான ஆளணி மற்றும் ஏற்படும் செலவீனங்கள் அடங்கிய அறிக்கையுடன் மத்திய உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக ஆளணி அங்கீகாரம் பெறுவதற்கும் அனுப்பி வைத்தது மாநகர சபை. ஆனால் அந்த ஆளணிக்கான அனுமதி வழங்கப்படவில்லை. பதிலாகப் பணியாளர் சம்பளம், பராமரிப்பு ஆகியவற்றிற்கு மாதாந்தம் 4 முதல் 5 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் என்பதனால் இந்தக் கட்டடத்தை மத்திய அரசின் பராமரிப்பில் முழுமையாக விட்டு விடுங்கள் என்ற கோணத்தில் அனுக முயன்றது. இதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை முழுமையாக மறுப்புத் தெரிவித்தது. அவ்வாறானால் உத்தியோக பூர்வமாக கையளிக்கும் வரையில் இராணுவத்தின் தொண்டர் படையணி கட்டடத்தைப் பராமரிக்கட்டும் என தெரிவித்தனர். இதறகும் மாநகர சபை முழுமையான மறுப்புத் தெரிவித்தது.

மாநகர சபையின் இந்த நிலைப்பாட்டுக்கு இந்தியாவும் ஆதரவாகவே இருந்து வந்தது. இந்தக் கட்டிடம் தமிழ் மக்களிற்காக கட்டப்படுவதாகவே இந்திய அரசினால் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது தெற்கு அல்லது மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் செல்வதனை எம்மாலும் ஏற்க முடியாது. அப்படி நடந்தால் அது இந்தியாவில் பெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதனை இலங்கை அரசு புரிந்துகொள்ளவேண்டும் என இந்தியத் தரப்பால் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டால் கட்டடத்தை மத்தியின் கட்டுப்பாட்டில் அடாத்தாக எடுத்துக்கொள்வதற்கு முடியாத நிலையில் கொழும்பு திண்டாடியது. இத்தனையையும் தாண்டி அனைவர் கண்ணிலும் எவ்வாறு மண்ணைத் தூவலாம் எனக் காத்திருந்தது கொழும்பு.

கலாச்சார மண்டபத்தைக் மக்களுக்கு உரித்தாக்கும் நிகழ்விற்கான திகதி குறிக்கப்பட்ட நேரத்தில் யாழ்ப்பாண மாநகர சபையில் முதல்வர் தெரிவு இறுபறி ஏற்பட்டது. அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு நிகழ்வில் இருந்து மெல்ல மாநகர சபையை முற்றாகப் புறக்கணிக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பெப்ரவரி 11ஆம் திகதி நிகழ்வில் இந்தியாவால் இலங்கை அரசிடம் கட்டடம் கையளிக்கப்பட்டதும் அதனை மாநகர சபையிடம் ஒப்படைப்பதாகவே தொடக்கம் முதல் திட்டம் தீட்டப்பட்டு வந்தது. நிகழ்வு மேடையில் வைத்தே இந்தக் கையளிப்பைச் செய்வதே திட்டம். ஆனால் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் கொழும்புக் கலாசார அமைச்சு வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் அலுவலகத்துடனும் ஆளுநர் அலுவலகத்துடனும் நேரடியாகக் கையாண்டதுடன், மாநகர சபைக்கு அது பற்றி எதுவும் தெரியாமல் பார்த்துக்கொண்டது. அத்துடன் நிகழ்வில் வைத்தே கட்டடத்தை மாநகர சபையிடம் கையளிக்கும் திட்டத்தையும் தூக்கிக் கடாசிவிட்டனர். இதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடந்தையாக இருந்தார்.

இதன் பின்பு நிகழ்வை ஏற்பாடு செய்து மேற்பார்வை செய்ய புத்தசாசன கலாசார அமைச்சர் யாழ்ப்பாணம் வந்தார். கலாச்சார மண்டபத்திற்கும் நேரடியாக சென்று அங்கே மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த கட்டளைகளை அதிகாரிகளை அழைத்து தானே நேரடியாக வழங்கினார். கட்டடத்தை முழுமையாக மத்தியின் அதிகாரப் பிடிக்குள் கொண்டு வரும் முயற்சி தீவிரப்படுத்தப்பட்டது.

இதை அறிந்ததும் அப்போதுதான் புதிதாக மீண்டும் பதவியேற்றிருந்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ.ஆனல்ட் அமைச்சர் வருகை தந்திருந்த இடத்திற்கு நேரில் சென்றார். அப்போதுதான் கட்டடத்தை ஒப்படைப்பதற்கான திகதி, ஏற்பாடுகள் அனைத்தும் முற்றுப்பெற்றுவிட்ட விவரம் அவருக்குத் தெரியவந்தது.

அங்கே புத்தசாசன அமைச்சருடன் யாழில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் ஆகியோரும் இருந்தனர். இந்த ஏற்பாடுகளையெல்லாம் பார்த்துக் கோபமடைந்த ஆனல்ட் பகிரங்கமாகவே அமைச்சருடன் முரண்பட்டார். இக் கட்டிடம் மாநகர சபைக்காக இந்தியாவினால் மாநகர சபையின் காணியில் கட்டப்பட்டதோடு எமக்குக் கையளிப்பதாகவே ஒப்பந்தம். ஆனால் அந்த இடத்தில் நிகழ்வை நடாத்தி கையளிப்பிற்கான ஏற்பாட்டை எமக்கு தெரியாது எம்மிடம் ஒரு முன் அனுமதியும் பெறாது நீங்கள் எவ்வாறு மேற்கொள்வீர்கள்? இதில் மாநகர சபையின் பங்கு என்ன இங்கே நினைவுக் கல்வெட்டு வைப்பதாக கூறுகின்றீர்கள் அதில் மாநகர சபையின் வகிபாகம் எந்த வகையில் உறுதிப்படுத்தப்படுகின்றது? மாநகர சபையிடமிருந்து கட்டத்தை முழுமையாகப் பறிக்கும் முயற்சியா? என ஆத்திரப்பட்டார்.

அந்த இடத்தில் பிரச்சினை பெரிதாகாத கொழும்பின் கலாசார அமைச்சர் மெல்ல இடத்தைவிட்டு நழுவிவிட்டார். இதனை என்னிடம் கேட்க வேண்டாம் நீங்கள் மாகாணப பிரதம செயலாளரிடம் கேளுங்கள் அவர் கூறியே நான் வந்தேன் என்றபடி அவர் நழுவி விட்டார்.

“எமக்கும் பிரதம செயலாளருக்கும் என்ன தொடர்பு எம்மை அவர் கட்டுப்படுத்தவும் முடியாது அவரிடம் நாம் ஏன் இது தொடர்பில் பேச வேண்டும்?” என்று முதல்வர் எகிறியபோது அவ்வாறானால் நீங்கள் ஆளுநருடன் பேசுங்கள் என்றார் அமைச்சர். ”எமக்கு உங்களிடம் என்ன பேச்சு, நான் ஆளுநரிடம் கேட்கின்றேன்” என ஆனல்ட் கோபமடையவும் சமாளிப்பில் ஈடுபட்டார் அமைச்சர்.

இதனையடுத்து ஆளுநர் செயலகத்தில் ஓர் கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு யாழ்ப்பாண மாநகர முதல்வரும் அழைக்கப்பட்டார். அதிலும் இந்த விடயங்களை மாநகர முதல்வர் தெரிவித்த சமயம் கல்வெட்டில் மாநகர சபையுடன் முதல்வரின் பெயர் பொறிக்கப்படுவதோடு நிகழ்வில் வரவேற்புரை அமைச்சருக்கு வழங்கப்பட்டுவிட்டதனால் நன்றியுரை என்ற வகிபாகம் மாநகர முதல்வருக்கு வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

இதன் பின்பு கலாசார மண்டப கையளிப்பு நிகழ்வு ஏற்பாட்டுக் கூட்டம் ஒன்று அமைச்சர் தலைமையில் கூடியபோது அதற்கு மாநகர சபைக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. அதிலே நன்றியுரை பிரதம செயலாளருக்கு என மாற்றப்பட்டது. மாநகர சபை மெல்லக் கழற்றிவிடப்பட்டது.

இது குறித்த விடயங்கள் மாநகர முதல்வர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றார். அதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்தின் நிர்ப்பந்தம் காரணமாக நினைவுக் கல்லில் மாநகர சபையினதும் மாநகர முதல்வரின் பெயரும் உட்புகுத்தப்பட்டது. கடைசி வரையில் நன்றியுரையும் மாநகர சபைக்கே வழங்கப்படும் என்றும் உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனால் அதற்கு அமைச்சர்கள் இருவரும் தடையாக இருந்தனர். அவர்கள் பிரதம செயலரின் நன்றியுரையை மாற்றுவதற்கு உடன்படவில்லை.

11ஆம் திகதி நிகழ்வு இடம்பெற இருந்த சமயம் 10ஆம் திகதி இரவு 10ம ணிக்கும் உறுதியான உத்தரவாதம் இன்மையால் நிகழ்வை முழுமையாக புறக்கணிப்பது தவிர வேறு மார்க்கம் இல்லை என்ற தகவல் இந்திய தூதரகம், ஜனாதிபதி செயலகம், ஆளுநர்களிற்கு தெரியப்படுத்தினார் மாநகர சபை முதல்வர். இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரின் காதுகளிளுக்கும் விடயம் கொண்டு செல்லப்பட்டது.


இதையடுத்து இரவு 10 மணியளவில் அண்ணாமலைக்கும் மாநகர முதல்வருக்கும் இடையில் அவசரமான 15 நிமிட சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது. நிலைமையை அவருக்கு எடுத்துக்கூறியபோது “நிச்சயமாக அது மாநகர சபைக்குரியது அதனை மீறி இலங்கை அரசு செயல்படுமாக இருந்தால் நானும் அமைச்சரும் மட்டுமன்றி அனைத்து தரப்பின் ஊடாகவும் பாரதப் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் அது இலங்கைக்கான எதிர்கால திட்டங்கள் வரையில் தாக்கத்தை செலுத்தியே தீரும். அதனால் நல்லது நடக்கும் என நம்புகின்றேன்” எனப் பதிலளித்தார் அண்ணாமலை. அதேநேரம் நிகழ்வைப் புறக்கணிக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில்தான் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது மாநகர முதல்வர் ஆனல்ட பங்கேற்றிருந்தார் இருப்பினும் எதிர்பார்த்தமை போன்றே மாநகர சபை புறக்கணிக்கப்பட்டது. நன்றியுரைக்கு பிரதம செயலாளரே அழைக்கப்பட்டார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த முதல்வர் “மாநிலத்தில் சுயாட்சி வேண்டும் என்பவர்களும் சில இனவாதிகளும் மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய சொத்தை கபளீகரம் செய்ய முயல்வதாகவே கூறவேண்டியுள்ளது. இதனை இந்தியாவும் கைகட்டி வேடிக்கை பார்க்கக்கூடாது. அதனால் எமது அதிருப்தியை பகிரங்கமாகவே பதிவு செய்கின்றோம். இவ்வாறுதான் இடம்பெறலாம் எனபதனால் நிகழ்வையே புறக்கணிக்க இருந்தபோதும் அது இந்தியாவை பகைத்ததாத அமையக்கூடாது என்பதனால் பங்குகொண்டேன்” என்றார்.

மாகாண உயர் பதவிகளிலும் மற்றைய உயர் பதவிகளிலும் அரசு ஏன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்களை நியமனம் செய்கிறது என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் பெரும் எடுத்துக்காட்டு.

காலைக்கதிர் Kalaikkathir



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 02 செவ்வாய்க்கிழமை 14.02.2023 கதிர் 349

## தபால் மூல வாக்களிப்பு திடீரென ஒத்திவைப்பு!

### தள்ளிப்போகுமா குட்டித் தேர்தல்?



உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பைக் காலவரையறையின்றி ஒத்திவைக்க தேர்தல்கள் ஆணைக்குழு 2

# 13ஆம் திருத்தச் சட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு



## கோட்டாபயவுக்குச் சார்பான பிக்குகளே போராடுகின்றனர் என்கிறார் கிரியெல்ல

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்கும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

13 என்பது அரசமைப்பின் ஓர் அங்கமாகும். அதனை எதற்காக எதிர்க்க வேண்டும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

கோட்டாபய ராஜபக்சவுக்குச் சார்பான ஓரிரு பிக்குகளே 13 இற்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்றனர் என்றும் கிரியெல்ல சுட்டிக்காட்டினார்.

## தேர்தல் வேண்டுமானால் வீதிகளில் இறங்குவோம்

### மனோ எம்.பி. அழைப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற வேண்டுமானால் அனைத்துக் கட்சியினரும் வீதிகளில் இறங்கிப் போராட வேண்டும். அந்த நிலைமைக்கு நாம் இப்போது தள்ளப்பட்டுள்ளோம்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா, 2

## ஆனல்ட்டின் பட்ஜெட் இன்று 8 வாக்குகளால் தோற்கடிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய முதல்வராகப் பதவி யேற்றுக்கொண்ட இமானுவேல் ஆனல்ட்டின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் வழங்கப்பட்டன.

ஈ.பி.டி.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மணிவண்ணன் அணி மற்றும் புளொட் என்பன கூட்டாக திர்ப்புத் தெரிவிக்க 8 மேலதிக வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டமானது இன்று சபையில் மாநகர முதல்வர் இ.ஆனல்ட்டினால் முன்வைக்கப்பட்டது.

ஆயிரத்து 712 மில்லியன் ரூபா பெறுமதியிலான வரவு செலவுத் திட்டம் முனமொழியப்பட்டது. அது தொடர்பான விவாதம் நிறைவடைந்த பின்பு பகிரங்க வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இ.ஆனல்ட், பாலச்சந்திரன், சூ.சிறில், ம.அருள்குமரன், என்.எம். நிபாகிர், ந.லோகதயாளன், மதிவதனி, பி.நளினா, மேரி அஞ்சலா, நீ.பிலிப், கிறேசியன், நா.தனேந்திரன், வி. நர்மதா. மொ.நியாஸ், வி.விஜயதாட்சாஜினி, சி.குலேந்திரராஜா ஆகியோர் ஆதரவளித்து வாக்களித்தனர். து.ஈசன், ப.தர்சானந், 2

## தேர்தலைப் பிற்போடவேண்டி ஏற்படும்

### அரசின் ஒத்துழைப்பு இல்லை என்கிறார் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கு தேவையான பணிகளை உரிய காலத்திற்குள் நிறைவு செய்ய முடியாவிட்டால் தேர்தலை பிற்போட வேண்டிய நிலை ஏற்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இன்று அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் விவகாரத்தில் சட்டமாதிபரின் ஒத்துழைப்பு போதுமானதாக அமையவில்லை, ஆகவே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தை மீண்டும் நாடவேண்டிய தேவை எழுந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

தபால்மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி தொடங்கும் நிலையில் வாக்குச்சீட்டு அச்சிடல் நடவடிக்கைகள் தற்போது தடைப்பட்டுள்ளன. 2





## வவுனியா காட்டில் மனித எச்சங்கள்

வவுனியாவில் பகுதியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஈரற்பெரியகுளம் புதிய நகர் பகுதியின் காட்டுப்பகுதியிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன. காணாமற்போன இதே பகுதியைச் சேர்ந்தவரான ஜிந்தக்க ராஜபக்வின் எச்சங்களாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 43 வயது ஜிந்தக்க 9 மாதங்களுக்கு முன்னர் காணாமற்போயிருந்தார். அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு 2

## சிங்களத்தில் பொலிஸ் கட்டளை ஏற்க மறுத்தார் சிறீதரன் எம்.பி.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை நீதிமன்றத்தில் ஆஜராகக் கோரும் பொலிஸ் கட்டளையை பொலிஸார் இன்று வழங்கியிருந்தனர்.

அந்தக் கட்டளை சிங்கள மொழியில் மாத்திரம் இருந்ததன் காரணமாக சிங்கள மொழி தனக்கு வாசிக்கத் தெரியாது எனவும், ஆகவே



## யானை தாக்கி முதியவர் சாவு

திருகோணமலை, தோப்பூரில் யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். இச் சம்பவம் இன்று அதி

## காதலர் தினத்தில் பொலிஸ் விழிப்பு

காதலர் தினத்தன்று சிறார்களையும் இளைஞர்களையும் குறிவைத்து பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்யப்படும் விருந்து பசாரங்கள் தொடர்பில் பொலிஸார் விழிப்புடன் இருக்கின்றனர் என்று பொலிஸ்



## தபால்மூல.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளது. அதன்படி, எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெற விருந்த தபால் மூல வாக்களிப்பு ஒத்திவைக் கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உரிய பணம் செலுத்தப்படும் வரை வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட மாட்டாது என அரச அச்ச கம் அறிவித்தமையால் திட்டமிட்ட வகையில் நாளை (15) முதல் தபால் மூல வாக்களிப்புக்கான ஆவணங்களை விநியோகிக்க முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள் ளது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கும், கட்சியின் செயலாளர்களுக்கும் இடையில் இன்று இடம் பெற்ற சந்திப்பின்போது தேர்தல் ஆணைக்குழு தலைவர் நிமல் புஞ்சிஹேவா இதனைத் தெரிவித்தார்

இந்த நிலையிலேயே, தபால் மூல வாக்களிப்பு திகதிகளை காலவரையறையின்றி பிற்போடுவதற்குத் தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, தேர்தலை ஒத்திவைக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசா ரணை எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில், தபால் மூல வாக்களிப்பு நடத்தப்படும் திகதிக்கு முன்னர் இந்த மனு மீதான விசார ணைக்கு எடுக்குமாறு மனுதாரர்கள் இடையீட்டு மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும், எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்று கட்சிகளின் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தேர்தல் வேண்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை அழைத்து நடத்திய கூட்டத்தின் தொனிப்பொரு ளாக, இந்தச் செய்தியை தான் நான் புரிந்து கொண்டேன் என்றும் மனோ எம்.பி. கூறினார்.

அரசை மீறி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சக்தி இல்லை.

தேர்தல் நடத்த அரசு விடாது. ஆகவே, தேர்தல் இடம்பெற வேண்டுமானால், அனைத் துக் கட்சியினரும் தெருக்களில் இறங்கிப் போராட்டம் செய்ய வேண்டும். வேறு மாற்று வழியில்லை –என்று மனோ எம்.பி. மேலும் தெரிவித்தார்.

## ஆனல்டின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுபாதீஸ், சாந்தரூபன் ஆகியோர் சபைக்கு வரவில்லை.

ப.யோகேஸ்வரி, வி.மணிவண்ணன், து.இளங்கோ, ரா.ராகினி, ல.தர்சிபா, ஜெ.ரஜீவ்காந், வை.கிருபாகரன், கி.டேமியன், சி.தனுயன், பத்மமுரளி, வ.பார்த்தீபன், ச.அனுசியா, ஜெயந்தி, க.நித்தியானந்தன், செ.சத்தியசேகரம், நி.கி.ஜெயசீலன், இ.செல்வவடிவேல், செ.ம ரியதாசன், நா.சிறீகரன், அ.சுபாசினி, இ.கணேசராஜா, பி.டெய்சி, இ.ஜெனன், ம.மயூரன் ஆகியோர் வரவு செலவுத் திட்டத் திற்கு எதிராக வாக்களித்தனர்.

மீண்டும் இரு வாரங்களுக்குள் ஆனல்ட் திருத்திய வரவு செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்து அது வெற்றி பெற்றால் மட்டுமே அவர் முதல்வராகப் பதவியில் தொடர முடியும்.

## தேர்தலைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பை நடத்துவதற்கான பணிகளுக்கு தடையேற்படும்போது அரச நிறுவனங்களினால் தனித்து செயற்பட முடியாது. ஆகவே வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகள் தாமதமானால் தபால் மூல வாக்கெடுப்பை பிற்போட வேண்டிய நிலை ஏற்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா அப்போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயர் நீதிமன்றத்திற்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பிற்கான பணிகளை ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

இருப்பினும் திறைச்சேரி நிதி ஒதுக்குவதைத் தாமதப்படுத்தினால் எம்மால் அடுத்தக்கட்டப் பணிகளைத் தொடர முடியாது. உள்ளூராட்சிம ன்றத் தேர்தல் விவகாரத்தில் சட்டமாதி அபரின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு எதிர்வரும் மாதம் 09 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து வாக்குச்சீட்டுகளும் தபால் திணைக்களத் திற்கு கையளிக்கப்படவேண்டும், தபால் மூல வாக்கெடுப்பிற்கான வாக்குச் சீட்டுகள் நாளை முதல் விநியோகிக்கப்படவேண்டும், ஆகவே இந்த பிரச்சினைக்கு இந்த வார காலத்திற்குள் உரிய தீர்வை எடுக்காவிட்;டால் எதிர்வரும் 22 ஆம் திகதி திட்டமிட்ட வகையில் தபால்மூல வாக்கெடுப்பை கோருவதில் பாதிப்பு ஏற்படும்.

நீதிமன்றத்தை நாடுவதை தவிர மாற்று திட்டம் ஏதும் எமக்கு கிடையாது. வாக்குச் சீட்டு அச்சிடல் தொடர்பில் உரிய தரப்பினருடனும், நிதி ஒதுக்கல் தொடர்பில் திறைச்சேரியிடமும் நாளை முக்கிய சந்திப்பில் ஈடுபடுவோம். சாதகமான தீர்வு கிடைக்காவிட்டால் நீதி மன்றததை நாடுவதை தவிர வேறு வழி எமக்கு இல்லை – என்றார் அவர்.

## யானை தாக்கி.....

((முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அல்லைநகர் 9 எனும் கிராமத் தைச் சேர்ந்த குப்பைத்தம்பி அப்துல்காதர் என்ற 83 வயதான முதியவரே உயிரிழந்துள்ளார்.

குடியிருப்பு காணியில் நுழைந்த காட்டு யானை வீட்டில் இருந்த தென்னைமரத்தை சாய்த்து சேதம் செய்துள்ளது. சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே வந்த குப்பைத்தம்பி அப்துல்காதர் யானையை சீனாவெடி போட்டுத் துரத்த முயற்சித்துள்ளார்.

கோவமடைந்த யானை அவரை துரத் தித் தாக்கியதில் அவர் உயி ரிழந்தார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

## வவுனியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தது. மீட்கப்பட்ட எச்சங்கள் தொடர்பான விசாரணைகளை வவுனியா ஈரற்பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காதலர் தினத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

விருந்துபசாரங்களை ஏற்பாடு செய்வதற்கும், கலந்துகொள்வதற்கும் தடை இல்லை என்றாலும், கடந்த ஆண்டுகளின் அனுபவங்களின் அடிப்படையில், பொலிஸார் விழிப்புடன் இருப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்படும் விருந்துபசாரங் கள் மற்றும் நிகழ்வுகளை சோதனை செய்ய பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

விருந்துபசாரங்களில் கலந்துகொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால், பங்கேற்பவர்கள் போதைப்பொருட்களைப் பயன்படுத்துகின்றார்களா என்பதைக் கண்டறி வதற்கு, விருந்துபசாரங்களிடையே பொலிஸார் சோதனை நடத்துவார்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## சிங்களத்தில்.....

((முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இதைத் தமிழ் மொழியில் கொண்டு வந்து தருமாறும் கூறி அவர்களிடம் சிறீதரன் எம்.பி. மீளக் கையளித்தார்.

பின்னர் அவர்கள் தமிழில் மொழிபெயர்த் துக் கொண்டு வந்து கொடுத்தபோது நீதிம ன்றத்துக்குத் தன்னை ஆஜராகுவதற்கு அழைக்கும் அழைப்பை நீதிமன்றம் தான் வழங்க முடியுமே தவிர நீதிமன்றத்துக்கு அழைக்கும் அழைப்பைப் பொலிஸாரால் தனக்கு வழங்க முடியுமா என நாடாளு மன்ற உறுப்பினர் வினவியபோது பொலிஸார் அமைதியாக இருந்தனர்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்களின் தலையீடு தேவை

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்துமா இல்லையா என்கிற கேள்விக்கு, தேர்தலுக்கு 23 நாள்களே இருக்கும் நிலையிலும் தெளிவான பதில் இல்லை. மக்களும் வேட்பாளர்களும் ஒரே குழப்பத்தில்இருக்கிறார்கள். தேர்தல்நடவழக்கைகள் தொடங்கப்பட்டபோதே, இந்தத் தேர்தலை நடத்தாமல் விடுவதற்கான காரணங்களை ஆட்சியாளர்கள் அடுக்கி வந்தனர். ஆனால் எதிர்க்கட்சிகள் அதற்கெதிராகக் கடுமையான நிலைப்பாட்டை எடுத்ததைத் தொடர்ந்து, தேர்தலைப் பிற்போடும் பகிரங்கச் செயற்பாடுகளில் இருந்து ஆட்சியாளர்கள் பின்வாங்கினர்.

சட்ட திட்டங்களின்படி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கானநடவழக்கைகளைமேற்கொண்டது. இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தை நாடியபோதெல்லாம், தேர்தலை நடத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்கமுடியும் என்றே அரச நிறுவனங்களாக திறைசேரியும் சட்டமா அதிபர் திணைக்களமும் தெரிவித்தன. நீதிமன்றமும் அதனை நம்பியது. இந்த நிலையில் தேர்தலை நடத்த முடியாத முட்டுக்கட்டைகளை ஆட்சியாளர்கள் இப்போது இடத்தொடங்கியுள்ளனர்.

வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிக்கான பணத்தை அரச அச்சகத்திற்கு விடுவிக்க முடியாது என்று தெரிவித்ததன் அடிப்படையில் அந்தப் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது தேர்தலை நடத்துவதற்கான முதல் அடியாக இருக்கின்றது. தபால் மூல வாக்களிப்பை இதனால் ஒத்திவைப்பது என்கிற முடிவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு வந்திருப்பதாகத் தெரிகிறது.

நேற்றுமாலை தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த அறிவிப்பில் தபால் மூல வாக்களிப்பு ஒத்திவைக்கப்படுவதான வெளிப்படையான தகவல் இல்லை எனினும் முன்னரே அறிவிக்கப்பட்ட திகதியில் அது நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதை உணர முடிகின்றது.

“2023.03.09 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்கான அஞ்சல் வாக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை 2023.02.15 ஆம் திகதி 111G நிலையங்களில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும்ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட, தவிர்க்க முடியாத காரணங்களினால்அஞ்சல்வாக்குவிநியோகிப்பதற்கான வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதனால், 2023.2.15ஆம் திகதி அஞ்சல் வாக்கு விநியோகம் இடம்பெற மாட்டாது. அஞ்சல் வாக்கு விநியோகிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது” என்று தனது அறிவிப்பில் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்குச் சீட்டுக்கள் மீண்டும் அச்சிடப்படத் தொடங்கியதும் அதற்கேற்ற வகையில் அஞ்சல் வாக்களிப்புத் திகதிகளைப் பிற்போட்டுக்கொண்டு, குறிப்பிட்ட திகதியில் தேர்தலை நடத்த முடியுமா என்று தேர்தல்கள் ஆணைக்குழு முயற்சிக்கிறது. ஆனால், கபட எண்ணத்தைக் கொண்டுள்ள ஆட்சியாளர்கள்மீண்டும்வேறுவேறுமுட்டுக்கட்டகளைப் போட்டு தேர்தலை நடத்தவிடாமல் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவரும் நிலையில் மக்கள் தலையிடாமல் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவே.

அமைச்சு செயலர் கையெழுத்தை இட்டு ஏய்க்கும்

# பண மோசடிக் கும்பலிடம் மக்களே ஏமாறாதீர்கள்

## அமைச்சு எச்சரிக்கை

தொழில் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்புஅமைச்சின்செயலாளரின்கையொப்பத்தைப் போலியாக இட்டு தயாரிக்கப்பட்ட அமைச்சின் கடிதத் தலைப்பொன்றை பயன்படுத்திக்கொண்டுபணம் மோசடி செய்துவரும் கும்பல் தொடர்பில் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதனால் இவ்வாறான மோசடிகாரர்களிடம் சிக்கிக்கொள்ள வேண்டாம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தொழில் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்புஅமைச்சின் ஊடாக நெதர்லாந்தில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் கையொப்பத்தைப்போலியாகஇட்டுதயாரிக்கப்பட்ட அமைச்சின் கடிதத் தலைப்பொன்றைபயன்டுத்திக்கொண்டு பணம் மோசடி செய்துவரும் கும்பல் தொடர்பில் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சின் ஊடாக எந்தவொரு நபரையும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகஅனுப்புவதில்லை. தொழிலுக்காக வெளிநாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையை மேற்கொள்வது. சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங் களில் மாத்திரமாகும்.

எந்த சந்தர்ப்பத்திலும் செயலாளரின் கையொப்பமிட்டு எந்தவொருவரையும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்ததில்லை. அதனால் அவ்வாறான மோசடி வியாபாரிகளிடம் ஏமாறவேண்டாம் என பொது மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த போலி வியாபாரிகளைக் கண்டுபிடிப்பதற்கு விசாரணை ஒன்றை நடத்துமாறு அமைச்சின் செயலாளர் குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு முறைப்பாடு ஒன்றை அனுப்பியுள்ளார். அதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வதற்குத் தெரிவுசெய்யும் வெளிநாட்டு முகவர் நிறுவனம் சட்டரீதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்.

# கடவுச்சீட்டு வழங்கல் மீண்டும் தொடக்கம்

## முன்பதிவு செய்தவர்களுக்கு மறுநாள் கிடைக்கும்!

இன்று (செவ்வாய்க்கிழமை) கடவுச்சீட்டைப் பெறுவதற்குநியமனங்களை முன்பதிவு செய்தவர்கள் நாளை (புதன்கிழமை) திணைக்களத்துக்கு சமுகமளிக்குமாறு குடிவரவு மற்றும்குடியகல்வுதிணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை (புதன்கிழமை) நியமனங்களை முன்பதிவு செய்தவர்கள் மறுநாள் வியாழக்கிழமை திணைக்களத்துக்குச் சமுகமளிக்குமாறும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது. கணினி கட்டமைப்பில்ஏற்பட்டதொழில்நுட் பக் கோளாறு காரணமாகதிங்கட்கிழமைகடவுச்சீட்டு வழங்குவதில் இடையூறு ஏற்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்திருந்தது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள அலுவலகங்களிலும் கடவுச்சீட்டு வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன்காரணமாக நேற்று கடவுச்சீட்டுப் பெறாதவர்களுக்கு இன்று மதியம் 12 மணிக்குப் பின்னர் கடவுச்சீட்டு வழங்கப்பட்டது என அறிவிக்கப்பட் டுள்ளது,

அத்துடன், எதிர்வரும் வெள்ளிக்கிழமைகடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முன்பதிவு செய்துள்ளவர்களுக்காக எதிர்வரும் சனிக்கிழமை கடவுச்சீட்டுக்கள்வழங்கப்படும் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# 30 ஆயிரம் ஆசிரியர்கள் நாட்டில் பற்றாக்குறை!

## ஆசிரியர் சங்கம் தகவல்



பாடசாலைகளில் சுமார் 30 ஆயிரம் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அந்தச் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாகத் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கல்வியியற் கல்லூரிகளில் பயிற்றப்பட்ட சுமார் 8 ஆயிரம் பேர் வெளியேறியுள்ளனர்.

எனினும், அவர்களை முறையாகப் பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான உரிய திட்டம் கல்வி அமைச்சிடம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# தெமட்டகொடவில் பெண் மீது சூடு இரண்டு தரைப் படையினர் கைது!

தெமட்டகொடவில் திங்கட்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை இராணுவத்தினர் இருவர் பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பேஸ்லைன் மாவத்தையில் உள்ள வீடொன்றில் நேற்று இரவுஇடம்பெற்றஇந்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு இராணுவச் சிப்பாய்களும் சந்தேக நபர் ஒருவரை கைது செய்யமுற்பட்டபோது, குறித்த பெண்ணை காயப்படுத்தும்வகையில் இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக இயங்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர்உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர், சிறிது நேரத்தில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொரளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## துருக்கி-சிரியா நிலநடுக்கத்தால்

# இறந்தவர்கள் எண்ணிக்கை 37 ஆயிரத்தைத் தாண்டியது



துருக்கி, சிரியாவில் கடந்த வாரம் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை திங்கட்கிழமை 37 ஆயிரத்தை நெருங்கியது.

சிரியா எல்லையையொட்டிய துருக்கியின் காஸியான்டெப் நகரில் கடந்த 6ஆம் திகதி ஏற்பட்ட அந்த நிலநடுக்கம் ரிச்டா அளவுகோலில் 7.8 அலகுகளாகப் பதிவானது. அந்த நிலநடுக்கத்தைத் தொடாந்து பல பின்னதிர்வுகள் ஏற்பட்டன. அவற்றில் 9 மணி நேரத்துக்கு ஏற்பட்ட ஒரு பின்னதிர்வு வழக்கத்துக்கு மாறாக மிக சக்திவாய்ந்ததாக இருந்தது. ரிச்டா அளவுகோலில் அந்த அதிர்வு 7.5 அலகுகளாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் துருக்கியின் தெற்கு மற்றும் மத்திய பகுதியும் சிரியாவின் வடக்குப் பகுதியும் மிகக் கடுமையாகக் குலுங்கின. துருக்கியின் நவீன கால வரலாற்றில், அந்த நாடு சந்தித்துள்ள மிக மோசமான நிலநடுக்கம் இது என்று கூறப்படுகிறது.

இந்த நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகின. இதில் சிக்கி உயிரிழந்தவர்களின்எண்ணிக்கை37ஆயிரத்தை நெருங்கியுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது 50 ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கும் என்று ஐ.நா. அறிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36,970 ஆகியுள்ளது. இதில் துருக்கியில் 31,640 பேரும், சிரியாவில் 5,320 பேரும் உயிரிழந்துள்ளனர். இரு நாடுகளிலும் சுமார் 94,000 போ காயமடைந்துள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

ஆண்டுதோறும் பெப்ரவரி 14 ஆம் திகதி (இன்று) காதலர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தத்தினம் மற்றவர்களிடம் நமது அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தும் நாளாக உள்ளது.

சிவப்பு என்பது வலுவான உணர்வுகளைத் தூண்டும் ஒரு நிறம். காதல், ஆர்வம் மற்றும் ஆசை ஆகியவற்றுடன் தொடர்புடையது. இது ரோஜாக்களின் நிறம், அன்பின் சின்னம் ஆகும்.

இந்த நிறம் பல நூற்றாண்டுகளாகக் காதலர் தினத்தில் அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

இதயம், ரோஜாக்கள், வில் மற்றும் அம்புகளுடன் கூடிய இதயம் இவற்றில் ஏதேனும் ஒன்றை நமக்குக் காண்பித்தால், நாம் முதலில் நினைப்பது காதல் மற்றும் அன்பை பற்றியதுதான்.

ஆனால் சிவப்பு ஏன் அன்பின் நிறமாகக் கருதப்படுகிறது? இதற்கு பல காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, சிவப்பு இதயத்துடன் தொடர்புடையது. இதயம் பெரும்பாலும் சிவப்பு சின்னமாக சித்தரிக்கப்படுகிறது.

சிவப்பு அன்பின் நிறமாக இருப்பதற்கு மற்றொரு காரணம், சிவப்பு ஒரு தைரியமான மற்றும் நம்பிக்கையான நிறம், இது உற்சாகம் மற்றும் ஆற்றல் உணர்வுகளை ஊக்குவிக்கிறது. நாம் சிவப்பு நிறத்தைப் பார்க்கும்போது, நம்முடைய மனதில் ஒருவிதமான நேர்மறை உணர்வைத் தூண்டுகிறது, அதனால்தான் காதலர் தினத்தில் அன்பை வெளிப்படுத்த இது சரியான நிறம்.

மேலும், சிவப்பு நிறம் அதிர்ஷ்டமாகவும் கருதப்படுகிறது. காதலர் தினத்தில் அன்பையும், மகிழ்ச்சியையும் சிவப்பு நிறம் ஈர்க்கும் என்று கூறப்படுகிறது. வரலாற்றுடன் ஒப்பிடும் போது, கிரேக்கர்களும் எபிரேயர்களும் சிவப்பு நிறத்தை அன்பின் அடையாளமாகக் கருதினர். காதலுக்கு சிவப்பு நிறம் என் பது உலகம் முழுவதும் அங்கீ கரிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறது. நீங்கள் அமெரிக்காவிலோ, ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ அல்லது வேறு எங்கும் இருந்தா லும், சிவப்பு நிறம் என்பது காதல் மற்றும் பாசத்திற்கு ஒத்ததாகவே உள்ளது.

எனவே, இந்த காதலர் தினத்தில், நீங்கள் சிவப்பு ரோஜாக்களின் பூங்கொத்து கொடுத்தாலும், சிவப்பு ஆடை அணிந்தாலும் அல்லது உங்கள் அலங்காரத்தில் சிவப்பு நிறத்தை இணைத்தாலும், இந்த நிறம் அன்பின் சக்தியையும் அழகையும் பிரதிபலிக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



# ஈரான் அதிபர் ரெய்சி நாளை சீனா பயணம்

ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி அரசு முறைப்பயணமாக சீனாவுக்குச் செல்ல இருக்கிறார். பெப்ரவரி 14 முதல் 16 வரை இப்ராஹிம் ரெய்சி சீனாவில் இருப்பார். சீனா வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் சீன துணை அதிபர் ஹு ஹுன்ஹுவா ஈரானுக்கு சென்றிருந்தார். அப்பயணத்தில் மத்திய கிழக்கு பகுதியில் நிலவும் பதற்றமான சூழல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தப் பயணத்தைத் தொடர்ந்து சீன அதிபர் ஜிஜின்பிங் ஈரான் அதிபர் ரெய்சிக்கு தங்கள் நாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இந்தச் சூழலில்தான் தற்போது ரெய்சி ஈரானுக்கு பயணம் செய்ய இருக்கிறார்.


அமெரிக்காவால் கடுமையான பொருளாதாரத் தடைக்கு உள்ளான ஈரானுக்கு சீனாதான் தற்போது முதன்மையான நட்பு நாடாக இருக்கிறது. இரு நாடுகளுக்கு இடையேயும் வர்த்தகமும் வளர்ந்துள்ளது. இந்த நிலையில் ரெய்சியின் சீன பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது.

கடந்த ஆண்டு, இரு நாடுகளும் பாரசீக வளைகுடா பகுதியில் பில்லியன் டொலர் மதிப்பில் முதலீட்டை செயல்படுத்த ஒப்பந்தத்தை மேற்கொண்டன. இந்த நடவடிக்கைகள் எண்ணெய் வளம் நிறைந்த பிராந்தியத்தில் சீனாவின் மதிப்பை உயர்த்துவதற்கான முயற்சியாகப் பார்க்கப்பட்டது.

இதற்கிடையில் ரஷ்யாவுடனும் தனது நட்பை ஈரான் வளர்த்து வருகிறது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈரான்தான் ஆயுதங்கள், ட்ரோன்களை வழங்குவதாக குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால் இதனை முதலில் மறுத்த ஈரான் பின்னர் ஒப்புக்கொண்டது.

# சீனா வானில் அமெ. பலூன்கள் 10 தடவைகள் பறந்திருக்கின்றன

## சீறுகிறது அந்நாட்டு அயலுறவுத்துறை அமைச்சு



அமெரிக்க வான்வெளியில் பெப்ரவரி 4ஆம் திகதி தொடங்கி சீன உளவுப் பலூன் சுட்டு வீழ்த்தப்பட்டது, அது தங்களது வானிலை ஆராய்ச்சி பலூன், வழி தவறி அமெரிக்காவுக்குள் வந்துவிட்டது என்று சீனா கூறியபோதும் அதனைச் சுட்டுவீழ்த்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டார். ஆனால் தங்கள் வான் எல்லையில் அமெரிக்க பலூன் 10 முறை பறந்துள்ள போதும் அவற்றைத் தாம் சுட்டத்திலை என்று சீன அயலுறவுத்துறைப் பேச்சாளர் தெரிவித்தார்.

"2022 ஜனவரி தொடங்கி இது வரை சீன வான் எல்லையில் அமெரிக்கா 10 பலூன்களை பறக்கவிட்டுள்ளது. அந்த பலூன்களை நாம் பொறுப்புடன், தொழில் ரீதியாக அணுகியிருக்கிறோம் என்றார் சீன அயலுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் வாங் வென்பின்.

பெப்ரவரி 4ஆம் திகதி வடக்குக் கரோலினாவில் சீன பலூன் ஒன்று பறந்தது. அந்த பலூன் 4 பேருந்துகள் அளவிற்குப் பெரியதாக இருந்தது. அது சீனாவின் உளவு பலூன் என்று கூறி அமெரிக்கா அதனைச் சுட்டு வீழ்த்தியது.

அமெரிக்க வான் பரப்பில் சீன உளவு பலூன் பறப்பதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து சீனாவுக்கான பயணத்தை வெளியுறவு செயலர் ஆந்தணி பிளின்கன் இடைநிறுத்தினார். ஆனால், "அமெரிக்கா அதீதமாக எதிர்வினையாற்றுகிறது. அது வெறும் ஒரு தனியார் நிறுவனத்தின் வானிலை ஆய்வு பலூன்" என்று சீனா தெரிவித்தது.

இதற்கிடையில், அமெரிக்கா 3 வெவ்வேறு மர்மப் பொருட்களை வடக்குப் பகுதியில் சுட்டு வீழ்த்தியுள்ளது. அவை சீனாவுடையவையா என்பதை யெல்லாம் அமெரிக்கா விவரிக்கவில்லை. இருப்பினும் சந்தேகத்துக்குரிய வகையில் பறந்ததால் அவற்றைச் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவித்தது. இந்நிலையில்தான் பலூன் விவகாரத்தில் அமெரிக்காவை விட தாங்கள் பொறுப்புடன் நடந்து கொண்டதாக சீனா தெரிவித்திருக்கிறது.

## அமெரிக்கப் பல்கலையில் துப்பாக்கிச் சூடு; மூவர் சாவு

அமெரிக்காவின் மிச்சிகன் மாநில பல்கலைக்கழகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்; 5 பேர் காயமடைந்தனர்.

துப்பாக்கிச் சூடு இரண்டு இடங்களில் நடத்தப்பட்டது. காயமடைந்தவர்கள் மருத் துவமனையில் சேர்க்கப்பட் டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல் துறையினர், மாணவர்கள், ஆசிரியர்களை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்தனர்.

பல்கலைக்கழக வகுப்புகள் மற்றும் செயல்பாடுகள் அடுத்த 48 மணி நேரத்திற்கு நிறுத்தி வைக்கப்படும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்தது.





# போரை நிறுத்திவிட்டு அந்தப் பணத்தில் நிலநடுக்கத்தைத் தாங்கும் வீடு கட்டுங்கள்

## டச்சு ஆராய்ச்சியாளர் அழைப்பு

போருக்குப் பதிலாக நிலநடுக்கத்தைத் தடுக்கும் வீடுகளைக் கட்டுவதற்குப் பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்று துருக்கி, சிரியா நிலநடுக்கத்தை முன்னரே கணித்து எச்சரித்த டச்சு ஆராய்ச்சியாளர் ஃபிராங்க் ஹுகர்பீட்ஸ் தெரிவித்துள்ளார்.

வரலாறு காணாத நிலநடுக்கத்தால் துருக்கி மற்றும் அதன் அண்டை நாடான சிரியாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 37 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இந்த நூற்றாண்டின் மிக மோசமான இயற்கைப் பேரழிவாக இதனை புவியியல் நிபுணர்கள் கருதுகின்றனர். இந்த மிகப்பெரிய நிலநடுக்கத்தை மூன்று நாட்களுக்கு முன்பு கணித்திருந்தார் டச்சுப் புவியியல் ஆராய்ச்சியாளர் ஃப்ராங்க் கூகர்பீட்ஸ். இதனை தொடர்ந்து அவர் இணையத்தில் பிரபலமானார். இந்த நிலையில் ஃப்ராங்க் கூகர்பீட்ஸ் பதிவிட்ட பதிவு ஒன்று மீண்டும் வைரலாகி உள்ளது. அதில் உலக நாடுகளுக்கு அவர் செய்தி ஒன்றை அளித்திருக்கிறார்.

இதுகுறித்து ஃபிராங்க் ஹுகர்பீட்ஸ் தனது ட்விட்டர் பக்கத்தில், மனிதர்கள் போர் செய்வதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக நிலநடுக்கத்தைத் தடுக்கும் வீடுகளைக் கட்டுவதற்குப் பணத்தைச் செலவழிக்கவேண்டும். அவ்வாறு செய்தால் அது ஒரு பெரிய முன்னேற்றமாக இருக்கும் என்று பதிவிட்டுள்ளார். அவரது கருத்தை இணையத்தில் பலரும் ஆதரித்துள்ளனர்.

# அரசமைப்பின் 13ஆம் திருத்தம் தொடர்பில் ரணிலுக்கு அனைவரது ஆதரவும் வேண்டும்!

## ஐ.தே.க. முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தில் பொலிஸ் அதிகாரத்தை தவிர காணி அதிகாரத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி எடுத்திருக்கும் தீர்மானத்துக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.

இதனை முறையாக செயற்படுத்தும்போது காப்போக்கில் பொலிஸ் அதிகாரத்தையும் மாகாணசபைக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு ஏற்படாது.

அத்துடன் 13 ஆம் திருத்தம் தொடர்பில் மக்களுக்கு பிழையான கருத்தை புகட்டியுள்ளதாலே எதிர்ப்புக்கள் எழுகின்றனவே தவிர, அதில் எந்த பயங்கரமான விடயங்களும் இல்லை என ஐக்கிய தேசிய முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் அசோக்க தனவங்ச தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் நாட்டுக்குள் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஒருசிலர் இதனைத் தங்களின் குறுகிய அரசியலுக்காக பயன்படுத்திக் கொண்டு, மக்களுக்கு பிழையான தகவல்களைத் தெரிவித்து வருகின்றன.

சில பௌத்த தேரர்களும் 13 தொடர்பில் சரியான முறையில் தெரிந்துகொள்ளாமல் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

13 ஆம் திருத்தம் என்பது எமது நாட்டின் அரசமைப்பின் ஒரு பகுதியாகும். அதனை யாராலும் மறுக்க முடியாது. மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதற்கே இன்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் பொலிஸ் காணி அதிகாரங்களைத் தவிர இன்னும் பல அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு இல்லாமல் இருக்கின்றன.

அது தொடர்பில் யாரும் கதைப்பதில்லை. என்றாலும் பொலிஸ் அதிகாரம் தவிர காணி அதிகாரத்தை வழங்கி, தேசிய காணி ஆணைக் குழு அமைத்து அதன் ஊடாக காணிகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்துக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும். காணி அதிகாரத்தை தேசிய காணி ஆணைக்குழு ஊடாக செயற்படுத்தும் போது யாருக்கும் பிரச்சினை ஏற்படுவதில்லை.

இதனை முறையாக செயற்படுத்திக் கொண்டு செல்லும் போது காப்போக்கில் பொலிஸ் அதிகாரத்தையும் மாகாணங்களுக்கு வழங்க முடியுமாகும். மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவதன் மூலம் மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படும் என சிலர் தெரிவிக்கின்றனர். ஆனால் அதனை முறையாக செயற்படுத்தினால் அவ்வாறான எந்த பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை.

அதனால் தற்போது ஜனாதிபதி தீர்மானத்துள்ளதன் பிரகாரம் காணி அதிகாரத்தை வழங்கி அதனை தேசிய காணி ஆணைக்குழு ஊடாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும். இதனை முறையாக செயற்படுத்தும் போது காலப்போக்கில் பொலிஸ் அதிகாரத்தையும் மாகாணங்களுக்கு வழங்குவதில் பிரச்சினை ஏற்படாது.

அத்துடன் மாகாணசபைகள் இந்த அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யுமாக இருந்தால், அதனைத் தடுப்பதற்கு அல்லது மாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. அதேநேரம் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி இவ்வாறான துஷ்பிரயோகம் இடம்பெறுவதைத் தடுக்க முடியும்.

அதனால் 13 ஆம் திருத்தத்தில் இருக்கும் விடயங்களை மாகாணங்களுக்கு முழுமையாக வழங்குவதில் எந்த பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை. என்றாலும் ஒருசிலர் திட்டமிட்டு, குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவே இதனைக் குழப்பி வருகின்றனர் என்றார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றிய பேச்சுக்களை முன்னெடுத்தால் நாட்டில் இல்லாத பிரச்சினைகள் தோற்றம் பெறும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர எவரும் இணக்கம் தெரிவிக்கமாட்டார்கள். அதிகாரப் பகிர்வு விவகாரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை ஏனைய மாகாணங்களின் நிலைப்பாடு வேறுப்பட்டதாகக் காணப்படுகிறது.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தற்காக பொதுஜன பெரமுனவிற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை. காலம் காலமாகக் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு புதிய அரசமைப்பை உருவாக்குவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான வரைவு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது,

ஆகவே புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு முழுமையான ஆதரவு வழங்குவோம். அரசமைப்பு திருத்தம் ஊடாகக் குறுகிய கால அடிப்படையில் தீர்வு காண்பதற்குப் பதிலாக புதிய அரசமைப்பு ஊடாக நிலையான தீர்வு காண்பது சிறந்ததாகும். ஆகவே, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம். – என்றார்.

---

### தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின்

# புற்றுநோயாளர்களுக்கு சத்துணவு அன்பளிப்பு

### சிவபூமி அறக்கட்டளை வழங்கியது



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உள்ள புற்றுநோயாளர்களுக்கு சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் இன்று சத்துணவுகள் வழங்கப்பட்டன.

சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் நேரில் வைத்தியசாலைக்குச் சென்று புற்றுநோயாளர்களுக்கான சத்து ணவுகளை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்று பவர்களிடம் வழங்கிவைத்தார்.

நாட்டில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டபோதும் சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினர் பெருந்தொகையான மருந்துகளை புற்றுநோயாளர்களுக்கு வழங்கி உதவியதுடன், அதன் தலைவர் ஆறு.திருமுருகன் ஊடகங்கள் ஊடாகவும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் பகிரங்க அறிவிப்பு வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து பலர் மருந்துகளை வைத்தியசாலைக்கு வழங்கியிருந்தனர்.

---



### ரூ. 50 லட்சத்துக்கு

# யானைத் தந்தங்களை விற்க முயன்றவர் கைது!

சுமார் 4 அடி உயரம் கொண்ட இரண்டு யானைத் தந்தங்களை 50 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்த ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமாரவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மாத்தறை பிரதேசத்தில் நபர் ஒருவர் ஒரு ஜோடி யானை தந்தங்களை விற்பனை செய்வதற்கு கொள்வனவு செய்ப வரை தேடுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபரைக் கைது செய்ததுடன் யானைத் தந்தங்களையும் கைப்பற்றினர்.

பொலிஸ் பரிசோதகர் மகேந்திர பெரேரா தலைமையிலான குழுவினர் சில நாள்களுக்கு முன்னர் மாத்தறைக்குச்சென்று, யானைதந்தங்களை வைத்திருந்தநபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரை மாத்தறை பிடபெத்தர பிரதேசத்தில் உள்ள விஹாரைக்கு அருகில் வைத்து கைது செய்துள்ளனர்.

---

### மனித எச்சங்கள் வவுனியாவில் மீட்பு!

வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் இறந்த ஆண் ஒருவரின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஈரற்பெரியகுளம் புதிய நகர் பகுதியின் காட்டுப்பகுதியிலே இந்த மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன் அதே பகுதியில் வசித்து வந்து காணாமல் போன ஒருவரின் சடலம் என பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியில் வசித்து வந்த 43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜிந்தக்க ராஜபக் ஷ என்பவர் கடந்த 9 மாதங்களுக்கு முன் காணாமல் போயுள்ளார். இந்நிலையில் இந்த மனித எச்சங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் இது காணாமல் போனவரின் உடல் அங்கங்களாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா ஈரற்பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

### தாய் கண்டித்தமையால் சிறுவன் உயிர் மாய்ப்பு!

மது போதையில் வீட்டுக்கு சென்ற 14 வயதுச் சிறுவனை தாய் கண்டித்ததன் காரணமாக தவறான முடிவெடுத்த சிறுவன் உயிரை மாய்த்தார் என திடீர் இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை மாலை மதுபோதையில் வீட்டுக்கு சென்றுள்ளார். அவர் மது போதையில் சென்றதை அவரின் தாயார் கண்டித்துள்ளார். அதனால் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்க முற்பட்ட நிலையில் திங்கட்கிழமை இரவு பத்து மணியளவில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச் சைக்காக சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இறப்பு தொடர்பில் யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

---

# தேர்தலை நடத்துவதற்கு பணம் வழங்காமல் இருக்க அரசு சதி!

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் 21 தடவைகள் முயற்சித்தபோதும் அது கைகூடாத நிலையில் தற்போது தேர்தலை நடத்துவதற்கு பணம் கொடுக்காமல் இருப்பதற்கு சதிசெய்து வருகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாணந்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு பல்வேறு திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வந்தது. இது வரைக்கும் 21 தடவைகள் இந்தத் தேர்தலைப் பிற்போடுவதற்காக முயற்சித்திருக்கிறது. அவை எதுவும் கைகூடவில்லை. இந்நிலையில் தற்போது தேர்தலை நடத்துவதற்கு பணம் கொடுக்காமல் இருப்பதற்கு சதிசெய்து வருகிறது.

அத்துடன் தேர்தல் நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கும் செலவுகளை நிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது. அமைச்சுக்களின் செயலாளர்கள், அரசமைப்பில் விதிக்கப்பட்டிருக்கும் கட்டளைகளைப் பின்பற்றுவதற்கு கடமைப்பற்றுள்ளனர்.

அதனால் நிதி அமைச்சின் செயலாளர் இதனை நினைவில் கொள்ளவேண்டும். சட்டத்தை மதிக்கும் அதிகாரியாக அவர் அந்த கடமையை நிறைவேற்றுவார் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அத்துடன் அரசாங்கம் அண்மைக்காலத்தில் மேற்கொண்ட கொண்டாட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் வருமானங்களின் பிரகாரம் இதற்கு செலவாகுவது ஒரு நாளுக்குரிய வருமானமாகும். அதனால் அரசாங்கம் அண்மையில் விதித்திருந்த வரியின் மூலம் இவ்வாறான 10 தேர்தல்களை நடத்த முடியும். –என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சமூகபாதுகாப்புக்கு ஏற்ற வகையில் உதவிச் செயற்திட்டங்கள் அவசியம்

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி பொதுமக்களின் சமூக, பொருளாதார உரிமைகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இவ்வாறானதொரு சூழ்நிலையில் விரிவான சமூகப்பாதுகாப்பை வழங்கக்கூடிய வகையில் தற்போது நடைமுறையிலுள்ள சமூக உதவிச்செயற்திட்டங்களை மறுசீரமைக்கவேண்டியது அவசியமாகும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை முடிவிற்குக்கொண்டுவரல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுக்குழுவின் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அதில் இலங்கை தொடர்பில் பேசப்படவேண்டிய முக்கிய விடயங்களை உள்ளடக்கி ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ள முற்கூட்டிய அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு –

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் 'இலங்கை : 'நாம் இப்போது முழுமையான ஸ்தம்பித நிலைக்கு அண்மையில் இருக்கின்றோம்' : இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சுகாதாரம், உணவு மற்றும் சமூகப்பாதுகாப்புசார் உரிமைகளைப் பாதுகாத்தல்' என்ற தலைப்பில் அண்மையில் நாம் வெளியிட்ட அறிக்கையை உங்களது கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகின்றோம்.

தற்போதைய நெருக்கடி சமூக, பொருளாதார உரிமைகளில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பது தொடர்பாக அந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கையில் எரிபொருள், உணவு, மருந்து உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜுன் மாதமளவில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 11 சதவீதமான குடும்பங்கள் அவற்றின் வருமானத்தை முழுமையாக இழந்திருப்பதுடன் 62 சதவீதமான குடும்பங்களின் வருமானம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதேபோன்று கடந்த ஜுன் மாதம் உணவுப்பணவீக்கம் 90.9 சதவீதமாகப் பதிவானது.

இவ்வாறானதொரு பின்னணியில் பெண்கள் உள்ளடங்கலாக நீண்டகாலமாக பின்தங்கிய நிலையிலுள்ள சமூகங்கள் இந்தப் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை வலுவாக உணரநேரிடும் என்ற கரிசனை தோற்றம்பெற்றுள்ளது. உரிய நேரத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்வதற்கான போக்குவரத்து வசதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமை, உயிர்காக்கும் மருந்துப்பொருள்களுக்கான தட்டுப்பாடு உள்ளடங்கலாக சுகாதாரசேவைகளில் நிலவும் மட்டுப்பாடான தன்மை போன்றவற்றின் காரணமாக கர்ப்பிணிப்பெண்கள் உயிரிழக்கக்கூடிய அச்சுறுத்தல்நிலை உயர்வடைந்திருக்கின்றது.

மேலும் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கல் போன்ற முக்கிய சமூக உதவிச்செயற்திட்டங்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவந்த சமூக ஆதரவு செயற்திட்டங்கள் தடைப்பட்டுள்ளமை மக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடி நிலைமையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தற்போது நடைமுறையிலுள்ள சமூக உதவிச் செயற்திட்டங்களை விரிவானதொரு சமூகப்பாதுகாப்பை வழங்கக்கூடியவகையில் மறுசீரமைக்கவேண்டியது அவசியமாகும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# றெமீடியஸ்க்கு நேற்று மாநகர சபையில் அஞ்சலி!



விபத்தில் உயிரிழந்த யாழ். மாநகர சபை உறுப்பினர் மூத்த சட்டத்தரணி மு.றெமீடியஸுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மாநகர சபை கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

மேலும் மறைந்த மு.றெமீடியஸுக்கு யாழ் மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தினர்.

யாழ்.மாநகர சபை உறுப்பினர் றெமீடியஸ் கடந்த 7 ஆம் திகதி சிறுப்பிட்டி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளானார்.

படுகாயத்தோடு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்தபோது உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் கைது!

கசிப்புக்காய்ச்சிக்கொண்டிருந்தபோது திறப்பனை, பிரதேசத்தை சேர்ந்த 28 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர் ஒருவரே இவ்வாறு திறப்பனையில் கசிப்புகாய்ச்சிக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் கசிப்பு காய்சிக் கொண்டிருப்பதாககிடைத்ததகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது காணி ஒன்றில் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்தபோதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 3 ஆயிரத்து 750 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 1,80,000 மில்லி லீற்றர் கோடாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ள நிலையில் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர்.


# புதிய மதுவரிச் சட்டமூலத்தை தயாரிக்குமாறு ஆலோசனை!

மதுபானம் மற்றும் புகையிலைப் பாவனை, அதனுடன் தொடர்புடைய வர்த்தகங்களை ஒழுங்குபடுத்துதல், குறித்த உரிமப்பத்திரங்களை வழங்குதல், மற்றும் வரி விதிப்பனவுகளுக்காக 1912 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தை சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

மதுவரிக் கட்டளைச் சட்டம் மற்றும் புகையிலை வரிச் சட்டத்துக்குப் பதிலாக புதிய மதுவரிச்சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதியால் 2022 ஆம் ஆண்டு இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, அதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சமூக ஊடகச் செயற்பாட்டாளரான அமரசிங்கவுக்கு தொடர்ந்து மறியல்!



தலதா மாளிகையை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சமூக ஊடக செயற்பாட்டாளர் சேபால் அமரசிங்கவை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தான் இவ்வாறு கருத்துத் தெரிவித்தமை தொடர்பில் தனது கட்சிக்காரர் வருந்துகிறார் எனவும் அவர் ஏற்கனவே சட்டமா அதிபருக்கு இது தொடர்பில் எழுத்துமூல கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளார் எனவும் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

# 7 பிளாஸ்டிக் பொருள்களுக்கு ஜுன் 7ஆம் திகதி முதல் தடை

ஒருமுறை பயன்படுத்தும் 7 வகையான பிளாஸ்டிக் பொருள்களின் இறக்குமதி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றை ஜுன் முதலாம் திகதி முதல் தடை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இதன்படி, ஒருமுறை பயன்படுத்தி கழிக்கப்படும் பிளாஸ்டிக் ஸ்ட்ரோ மற்றும் கரண்டிகள், ஒருமுறை பயன்படுத்தும் தட்டுகள், கப் (யோகட் கப் தவிர), கரண்டி, முட்கரண்டி மற்றும் கத்திகள், பிளாஸ்டிக் மலர் மாலைகள், பிளாஸ்டிக் தயிர் கரண்டி உள்ளிட்ட பிளாஸ்டிக் பொருள்களுக்குத் தடை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# திருமுறை வழியில் திருக்குடமுழுக்கு





மட்டக்களப்பு –கல்முனை பதியுறையும் அருள்மிகு கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் அமைந்துள்ள சித்தர் சமாதிக்கு வெள்ளிக்கிழமை காலை சித்தர் மரபுப்படி திருமுறை வழியில் திருக்குடமுழுக்கு இடம்பெற்றது. மூவாயிரம் ஆண்டுகள் பழமையான கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் அமைந்துள்ள சித்தர் சமாதிக்கான திருக்குடமுழுக்கு விழாவை சைவப்புலவர் சி.கா.கமலநாதன் சிறப்பாக நடத்தியிருந்தார்.

# புலிகளின் தலைவர் குறித்து கோட்டா என்ன கூறினார்?



தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாத அமைப்பின் தலைவர் பிரபாகரனுக்கு 2009 இல் எமது படையினர் முடிவுகட்டி விட்டார்கள் என போரின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றியவரும், முன்னாள் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போர்க்களத்தில் இருந்து அவரின் சடலத்தை மீட்டு எரித்தோம், அதன்பின்னர் அவர் எப்படி உயிருடன் இருப்பார் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரபாகரன் மட்டுமல்லர் அவரின் மனைவி, மகள், மூத்த மகன், இளைய மகன் ஆகியோரும் இறுதிப் போரில் உயிரிழந்துவிட்டார்கள். மனநோய் பிடித்தவர்கள் பிரபாகரனின் பெயரைப் பயன்படுத்தி அரசியல் செய்ய முனைகின்ற அதேவேளை, அவர்களில் சிலர் பிரபாகரனை உயிர்ப்பிக்கவும் முயற்சிக்கின்றனர்.

இந்த மனநோயாளர்களின் கருத்துக்குப் பதிலளிப்பது எமக்குத்தான் வெட்கக்கேடு என குறிப்பிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

# பிரபாகரனின் குடும்பத்தில் எவரும் உயிருடன் இல்லை!

## அடித்துக்கூறுகிறார் கமால் குணரட்ண

இறுதிப்போரில் பிரபாகரனுடன் அவரின் மனைவி, மூன்று பிள்ளைகளும் உயிரிழந்துவிட்டனர், பிரபாகரன் குடும்பத்தில் எவரும் இன்று உயிருடன் இல்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதிப்போரில் கொல்லப்பட்டுவிட்டார்.

இந்தத் தகவலை 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக சர்வதேசத்துக்கு அறிவித்துவிட்டது.

இந்நிலையில் பிரபாகரனும் அவரின் மனைவியும் மகளும் உயிருடன் இருக்கின்றார்கள் என்று பொய்யான தகவலை தமிழகத்தில் உள்ள புலிகள் சார்பு அமைப்பைச் சார்ந்த முக்கியஸ்தர் ஒருவர் வெளியிட்டுள்ளார். பொய்யான தகவலை வெளியிட்டவருக்கு எதிராக இந்திய மத்திய அரசாங்கம் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பொய்யான தகவல் தொடர்பில் இலங்கையில் எவரும் குழம்பத் தேவையில்லை. – எனத் தெரிவித்துள்ளார்.

# 'விடுதலைப் புலிகளின் தலைவர் வருவார் என்றபோது உயிரிழந்த செய்தியை தேடி அலைய தேவையில்லை'!

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் வருவார் என்ற போது உயிரிழந்த செய்தியை தேடி அலைய வேண்டிய தேவையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடனும், நலமுடனும் இருக்கிறார், உரிய நேரத்தில் மக்கள் முன் வருவார். ஆனால் எங்கு உள்ளார் என்பதைத் தற்போது அறிவிக்க இயலாது' எனவும் உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் செய்தியாளர்களை சந்தித்து அறிவித்திருந்தார்.

பழ.நெடுமாறன் தெரிவித்த இந்தக் கருத்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், பிரபாகரன் உயிருடன் இல்லை என்று இலங்கை இராணுவம் திட்டவட்டமாக தெரிவித்திருந்தது.

மேலும், விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தற்போது உயிருடன் இல்லை. 2009 மே 18 இல் நடந்த இறுதிக்கட்ட போரில் அவர் உயிரிழந்ததற்கான ஆதாரம் எங்களிடம் உள்ளது என்று இலங்கை இராணுவம் மறுப்பு வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், பழ.நெடுமாறனின் இந்த அறிவிப்பு தற்போது அரசியல் வட்டாரத்தில் பெரும் பேசுபொருளாகியுள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இது தொடர்பில் இணைய ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் தேசிய தலைவரின் வருகைக்காக உலக வாழ் தமிழ் மக்கள் காத்திருக்கின்றோம். அவரின் வருகை பழ.நெடுமாறனின் கருத்துப்போன்று உண்மையாக வேண்டும்.

அவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் உயிருடன் வந்தால் உலகில் சிறந்த இனமாக தமிழினம் அடையாளப்படுத்தப்படும். அதற்காக காத்திருக்கின்றோம்.

மேலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் வருவார் என்ற போது அவரின் மரணம் தொடர்பான செய்திகளை ஆராய வேண்டிய தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் அதை கூறியவர் ஆஸ்திரேலியாவில்!

## திருச்சி வேலுச்சாமி உறுதி



பிரபாகரன் இறக்கவில்லை என்பது அவரை சடலமாக காட்டிய போதே தெரியும் என திருச்சி வேலுச்சாமி தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் கூறுகையில் –

இறுதி போரில் முள்ளிவாய்க்காலில் பெரும் அழிவொன்று ஏற்படப்போகின்றது என்று 10 நாளைகளுக்கு முன்பே ஒரு நேர்காணலில் நான் கூறியிருந்தேன்.

இந்த விடயம் அதாவது, முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை நடைபெறும் என்ற விடயம் எனக்கு மாத்திரமன்றி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் தெரியும்.

இப்படி ஓர் அழிவு ஏற்பட போவதாக நான் கூறி, யாராவது காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டேன். ஆனால் இந்த அழிவு தொடர்பில் முன்கூட்டியே தெரிந்தும் பிரபாகரன் யுத்த களத்திலேயே இருந்தார்.

இருப்பினும் பிரபாகரன் இறக்கவில்லை என்று நான் உறுதியாக நம்புகின்றேன். பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். அவர் நிச்சயம் திரும்பி வருவார். இதை நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை.

பிரபாகரன் மறைந்துவிட்டார் என்று இந்த உலகமே அதிர்ந்துபோய் இருந்தபோது அவர் மறையவில்லை, அவர் உயிரோடுதான் இருக்கிறார், அவர் இறந்ததாகக் காட்டப்படும் புகைப்படம் உண்மையில்லை என நான் ஒரு நேர்காணல் வழங்கினேன்.

அதற்கு உறுதியான காரணங்கள் என்னிடம் உள்ளன.

போர் முடிவில் இலங்கை அரசாங்கம் பிரபாகரன் இறந்துவிட்டதாக அந்த உடலை காட்டுகிறார்கள்.

அவ்வாறு உடலை காட்டும் போது தலையை மட்டும் காட்டாமல் ஒரு தொப்பியைப் போட்டிருந்தார்கள். இதேவேளை இரண்டு கண்களும் விழித்தபடி இருந்தன.

அதை பார்த்த உடனே நான் சொன்னேன், நான் ஒரு கிராமத்தில் பிறந்தவன் ஒரு நீர்நிலையில் அதாவது, குளம், ஏரி, கடல் என எதுவாக இருந்தாலும் ஒரு மனிதன் அதில் பிணமாகிக் கிடப்பானெனின் அவனுடைய உடலில் முதல் முதலாக மீன்கள் சேதப்படுத்துவது கண்களை தான்.

அப்படியிருக்கையில், இலங்கை அரசும் இராணுவமும் சொல்லுகின்றது, நந்திக் கடலில் பிரபாகரனின் மரணம் சம்பவித்து, ஓர் இரவு முழுவதும் அவர் அங்கே கிடந்தார், நாங்கள் தான் அவரை கொண்டுவந்தோம் என்கிறார்கள்.

ஆனால் அப்போதும் அவருடைய கண்கள் விழித்தபடி இருந்தன. இது எனது முதல் சந்தேகம்.

இரண்டாவது, விடுதலைப் புலிகளின் சீருடையை அணிந்து அதில் எப்போதும் அவருடைய பெயரை பொருத்திக்கொள்ளும் வழக்கம் பிரபாகரனுக்கு இல்லை.

ஆனால் பிரபாகரன் என்று சொல்லி காட்டப்பட்ட சடலத்தில் அந்த பெயர் வில்லை இருந்தது. இதுவும் முரணாக இருந்தது.

எனவே இதை ஏற்பாடு செய்தவர்கள் ஏதோ ஓர் உள்நோக்கத்துக்காகத் தான் செய்திருக்கிறார்கள். பிரபாகரன் உறுதியாக மரணமடையவில்லை என்று அப்போது சொன்னேன். ஆனால் அதற்கு ஒரு கால மாதத்துக்குப் பின்னர் பிரபாகரனின் அருகிலேயே இருந்த ஒருவரை நான் சந்திப்பேன் என்று நினைக்க வில்லை.

சம்பந்தப்பட்ட நபரை நான் சந்தித்த போது அவர் தப்பிவிட்டார் எனக் கூறினார். அப்படி கூறியவர் இன்றும் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார். அவர் ஆஸ்திரேலியாவில் எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது.

ஆனால் ஆண்டுக்கு ஒருமுறை அல்லது ஈராண்டுக்கு ஒருமுறை என்னை அழைப்பார். எனவே, நான் உறுதியாகக் கூறுகின்றேன் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். அவர் நிச்சயம் திரும்பி வருவார். – என கூறியுள்ளார்.

# சு.க. வேட்பாளர் அறிமுகம் யாழ்ப்பாணத்தில் நடந்தது



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளர் அறிமுக கூட்டம் இன்றைய தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கருத்தமர்வும் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயா ஸ்ரீ ஜெயசேகர, கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளர் சஜின்வாஸ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உப தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் உதவித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் மற்றும் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.02.2023 இல் வெளியிடப்பெற்றது.